விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 18 புதன்கிழமை (03.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227



ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# போர்க் குற்றச்சாட்டிற்கு பதிலளிக்க தயாராகும் முன்னாள் போராளிகள்!

## புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான சர்வதேச நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றுவதற்கு விடுதலைப்புலிகளின் 11 ஆயிரத்து 664 போராளிகளும் தயாராக இருப்பதாக புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள சனல் 4 தொலைக்காட்சிக்கு எதிராக சாட்சியமளித்து, அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கத்தின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டுள்ள முன்னாள் போராளிகள் 11 ஆயிரத்து 664 பேரும் தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

படையினரால் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் போராளிகளை சமூகத்தில் ஒன்றிணைப்பதற்கான சமய மற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு தோல்வியடையும் சாத்தியம்

### ஐக்கிய தேசியக் கட்சி ஆரூடம்

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகள் தோல்வியடையக்கூடும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைவதற்கான சாத்தியமே அதிகளவில் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் அரசாங்கம் மறுபுறத்தில் தமிழர்களுக்கு அரசியல் ரீதியான அநீதிகளை இழைத்து வருகிறது.

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர் இருவர் சைப்பிரஸில் பலி

(கொழும்பு)

சைப்பிரஸில் இலங்கையர் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக சைபிரஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படவில்லை. எனினும் அவர்கள் 21 மற்றும் 26 வயதானவர்கள் எனவும் நீந்தத் தெரியாதவர்கள் எனவும் ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேகெலியா நகரில் உணவு விடுதியொன்றுக்கு அருகி (19ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்றச்சாட்டை மறைக்க பாதுகாப்பு அமைச்சின் புதிய அறிக்கை

### மனிதவுரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள மனிதாபிமான நடவடிக்கையின் உண்மைப் பகுப்பாய்வு என்ற பெயரிலான புதிய அறிக்கையை விமர்சித்துள்ள மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், இது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் குற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை என உலகை நம்பச் செய்வதற்கான ஒரு முயற்சி என கூறியுள்ளது.

யுத்தத்தின் கடைசி மாதங்களில் பொது மக்கள் உயிரிழந்ததை இலங்கை அரசாங்கம் இறுதியாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் திருப்தி அளிக்காத வகையில் அதற்குப் பொறுப்பேற்கவில்லை என நியூயோர்க்கை தளமாகக் கொண்ட மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பணிப்பாளர் பிரையன் அடம்ஸ் கூறியுள்ளார்.

மோதலின் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழில் வெளியானது நிபுணர் குழுவின் அறிக்கை

(சென்னை)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இந்தியாவில் விற்பனைக்கு வந்துள்ளது.

போர்க் குற்றவாளி என தலைப்பிடப்பட்ட இந் நூல் சென்னையைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனிதம் வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

328 பக்கங்கள் கொண்ட இந் நூலில் 240 பக்கங்கள் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 328 பக்கங்களைக் கொண்ட இந் நூலில் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையை இலகுவாகப் புரிந்து கொள்வதற்கான மேலதிக விளக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன. (19 ஆம் பக்கம் பார்க்க)




கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது...

## மோ. சைக்கிள் மோதி முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த முதியவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த முதியவர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 8.15 மணியளவில் சுண்டுக்குளி பழைய பூங்காவிற்கு அண்மையில் இடம்பெற்றது.

இதில் அப் பகுதியைச் சேர்ந்த முத்து நடேஷ் (வயது - 87)என்பவரே உயிரிழந்தவராவார். காலை உணவை முடித்துக்கொண்டு ஆலயத்திற்குப் புறப்படுவதாகக் கூறிச் சென்றவர் வீதியில் (19 ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4க்கு உதவிய குற்றச்சாட்டில் கைதானவர் கைது

(கொழும்பு)

சனல் 4 தொலைக்காட்சிக்கு வீடியோ காட்சிகளை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட கந்தவனம் கேதீஸ்வரன் என்ற சந்தேகநபரை விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி நேற்று உத்தரவிட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி அருணா ஜயசிங்க நீதிமன்றத்தில் அறிக்கையொன்றைத் தாக்கல் செய்தார். சந்தேக நபர் தங்கியிருந்த இடத்தில் மேற்கொண்ட தேடுதலின்போது அவரிடமிருந்து 71 இறுவட்டுக்கள் கைப்பற்றப்பட்டன. சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் என்ற (20ஆம் பக்கம் பார்க்க)





உங்கள் எண்ணம்போல் இல்லங்களை அழகுபடுத்த நாங்கள்...

Naveen Ceramic PVT LTD

No.212, Palaly Rd, Jaffna. No.05, Stanly Rd, Jaffna.

SINGAPORE Rs. 4/-

IDD Per Minute Package

#678# க்கு டயல் செய்து நுழைந்திடுங்கள் அல்லது IDDMIN என டைப் செய்து 678க்கு SMS செய்யுங்கள்

Dialog



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

## சாதனையாளர் விருது விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைக்களிலிருந்து மாகாண மட்டப் போட்டிகளிலும், தேசியமட்டப்போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிபெற்ற 200 வரையான மாணவர்களுக்கு விருதுவழங்கி கௌரவிக்கும் சாதனையாளர் விருதுவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்கதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஏ)

FINANCIAL SPONSOR
for Student Visa
any country
VTL Management (Pvt) Ltd
Colombo - 3.
072-9994777/011-7902938

## விழிவெண்படல சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

பார்வை-2020 திட்டத்தின் கீழ் விழிவெண்படல குறைபாடுடைய நோயாளர்களுக்கு இலவசமாக கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இச் சத்திரசிகிச்சை முகாமிற்கு நோயாளர்களை தெரிவுசெய்யும் சிகிச்சை முகாம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும், எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையிலும், 11.00 மணி முதல் வேலணை பிரதேச வைத்தியசாலையிலும் இடம்பெறும்.

இச் சிகிச்சை முகாமில் கண்சத்திர சிகிச்சை நிபுணர்கள் நோயாளர்களை தெரிவு செய்வார்கள். எனவே விழிவெண்படல குறைபாடுடைய நோயாளர்கள் இச் சிகிச்சை முகாமில் பங்குபற்றி தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஏ)

## பரீட்சை பணியாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தால் க.பொ.த.(உ/த) பரீட்சை பணியாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

பிராந்திய சேகரிப்பு நிலையம், யாழ்ப்பாணம்-11க்குட்பட்ட வலிகாமம் கல்விவலயம், வடமராட்சி கல்விவலயம், கோப்பாய் கல்விக் கோட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த பரீட்சைக் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்காக மேற்படிக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

எனவே பரீட்சைக்கடமைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் ஆகியோரை தவறாது உரிய நேரத்திற்கு சமுகம் அளிக்குமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் பா.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## லிப்டன் சுற்று வட்டத்தில் நேற்று ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஞானசுந்தரம் குகநாதன்மீதான தாக்குதலைக் கண்டித்து கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டு இத்தாக்குதலுக்கு எதிரான கண்டன கோசங்களை எழுப்பினர்.

ஊடகங்களுக்கு எதிரான அடக்கு முறையை மேற்கொள்ளாதே, தகவல் சுதந்திரத்தை தடுக்காதே, ஊடகப் படுகொலையை நிறுத்து, எழுதுஎழுது அநியாயங்கள் சமூகவிரோதங்களை எழுது, பத்திரிகை ஆசிரியர்கள் மீதான அடக்கு முறையை உடன் நிறுத்து போன்ற கோசங்களை எழுப்பியவாறும் ஊடகங்களுக்கு எதிரான ஒடுக்கு முறையை நிறுத்து, உண்மை மீதான தாக்குதல் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ-8)

# இலங்கைக்குழுவின் பயணத்துக்கு தமிழ்நாட்டில் பலத்த எதிர்ப்பு

(சென்னை)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான நாடாளுமன்ற குழுவினரை இந்திய நாடாளுமன்றத்திற்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமைக்கு தமிழ்நாட்டில் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

மழைக்காலக் கூட்டத்தொடரில் ஈழத்தமிழர் பிரச்சினை உறுதியாக எழுப்பப்படும் எனத் தெரிவித்திருந்த நிலையில் எதிர்க்கட்சிகளைத் திசை திருப்புவதற்கு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவை இந்திய அரசு திட்டமிட்டு அழைத்திருப்பதாக தமிழர் பாதுகாப்பு இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்திய அரசின் அழைப்பின் பேரில் இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் வந்துள்ள குழுவினருக்கு இந்திய நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு அ.தி.மு.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டம் தொடங்கும் வேளையில் இலங்கை நாடாளுமன்றக் குழு வந்திருப்பது திட்டமிட்ட ஒன்றாகும். சில நாட்களுக்கு முன்னால் இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் நிருபமா ராவ் கொழும்பு சென்று ராஜபக்ஷவை சந்தித்து பேசியதன் விளைவாகவே இக்குழு அனுப்பப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் ராமதாஸும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்களின் நலன்களை பாதுகாப்பதில் இந்திய அரசுக்கு உண்மையிலேயே கரிசனை இருக்குமானால் போர்க்குற்றம் சுமத்தப்பட்ட தலைவர்களை இந்தியாவுக்கு அழைப்பதை நிறுத்திவிட்டு குற்றவாளிகள் மீது போர்க்குற்ற விசாரணையை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை ஈழத்தமிழர்களை லட்சக் கணக்கில் இனப்படுகொலை செய்த அரசை கௌரவிக்கும் நிகழ்ச்சிகளை தொடர்ந்து இந்தியா நடத்தி வருகின்றது.

2009 மே மாதம் குவியல் குவியலாக ஈழத்தமிழ் மக்களை கொன்றெழித்த ராஜபக்ஷவை திரும்பத்திரும்ப டில்லிக்கு அழைத்து சிவப்பு கம்பள வரவேற்புக் கொடுத்து வருகிறது இந்தியா.

இப்பொழுது இலங்கை நாடாளுமன்ற அவைத் தலைவரையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கௌரவிக்கும் வகையில் இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவைக்கும் மாநிலங்களவைக்கும் அழைத்து சிறப்பித்திருக்கிறது என தமிழ்த்தேச பொதுவுடமைக்கட்சியின் சார்பில் மணியரசன் கண்டித்துள்ளார். (எ-8)

## ஆசிரியர் நியமனம் பெற்ற நுண்கலை பட்டதாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட நுண்கலை பட்டதாரிகளுக்கும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறிக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்/வேம்படி உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பில் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை அலரிமாளிகளையில் நியமனக்கடிதம் பெற்ற (மாகாணம் மற்றும் தேசிய பாடசாலை) நுண்கலைப் பட்டதாரிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறும், அத்தோடு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக்கடிதம் மற்றும் கடமையேற்ற கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும் எனவும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் இக் கலந்துரையாடலில் சகல வலயக்கல்விப்பணிப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ஸ்ரீ-4)

# திருட்டுக் கும்பலை எதிர்த்துப் போராடிய குடும்பஸ்தர் வாள்வெட்டில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பாலாவோடையில் உள்ள யாழ். கூட்டுறவுத்திணைக்கள ஊழியர் ஒருவரின் வீட்டுக்கு நுழைந்த திருட்டுக்கும்பல் அங்கிருந்தவர்களை தாக்கியதுடன் வீட்டு உரிமையாளரை வாளினால் வெட்டிகாயப்படுத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 12.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனது தாயாரின் அந்தியேட்டிக் கிரியைக்கான ஒழுங்குகளை உறவினர்களுடன் சேர்ந்து மேற்கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் வெளிவாயில் வழியாக உள் நுழைந்த மூவர்கொண்ட குழு அங்கு நின்ற பெண்களுக்கு வாளைக்காட்டி மிரட்டியுள்ளது. இதனால் அவர்கள் குளறியபடி வீட்டின்பின் புறம்நோக்கியோட அங்கு நின்ற வீட்டு உரிமையாளர் திருட்டுக்கும்பலை எதிர்த்துள்ளார்.

அப்போது அவரை ஒருவன் சரமாரியாக கழுத்திலும், முதுகுப்பகுதியிலும் வெட்டியுள்ளான் அந்த நிலையிலும் அவர் திருடன் ஒருவனைக்கட்டிப் பிடித்தவாறு கூக்குரல் இட அங்கு ஊர்மக்கள் கூடினர். அப்போது இரு கொள்ளையர்கள் தப்பித்துவிட ஒருவர் அவர்களிடம் வசமாக மாட்டிக்கொண்டார். பிடிபட்ட திருடனை மக்கள் நையப்புடைத்ததுடன் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் பிடிபட்ட கள்ளனை யாழ்.போதனாவைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். இதேவேளை கள்வரின் தாக்குதலுக்குள்ளவரும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதேவேளை பிடிக்கப்பட்ட நபர் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டுள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதது. இவர் மீது பல வழக்குகள் பதிவாகியுள்ளதுடன் இவர் கடந்த சில தினங்களுக்கு முன் உரும்பிராயில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் முகம்மூடிக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (எ-8)

## மன்னார் கடற்கரையில் இந்திய மீனவரின் சடலம்

(கொழும்பு)

மன்னார், சௌத்பார் கடற்கரையில் நேற்று செவ்வாய்க்கிழமை கரையொதுங்கிய இந்திய மீனவர் ஒருவருடைய சடலத்தினை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர். சௌத்பார் கடற்கரைக்கு தொழிலுக்குச்சென்ற மீனவர்கள் குறித்த சடலத்தினைக்கண்டு கடற்படையினருக்கு அறிவித்துள்ளனர்.

அதன்பின் கடற்படையினரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர். சுமார் 45 வயது மதிக்கத்தக்க மீனவர் ஒருவருடைய சடலமே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் அடையாளம் காணமுடியாத நிலையில் காணப்பட்டது.

மன்னார் நீதவான் கே.ஜீவரானியின் உத்தரவிற்கமைய சடலம் சோதனையிடப்பட்ட போது குறித்த நபர் அணிந்திருந்த உடையின் பொக்கற்றிலிருந்து இந்திய நாணயம், இந்தியத் தீப்பெட்டி என்பன மீட்கப்பட்டன.

கடலில் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் பாணியில் இவர் ஆடை அணிந்திருந்தால் இவர் மீனவராக இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சடலத்தினை பிரேத பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணையை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஏ)

## புத்தகங்கள் திருடியவருக்கு 26 மாத சிறைத்தண்டனை

(கொழும்பு)

கொழும்பு-2ல் உள்ள லேக் கவுஸ் புக்சொப் எனும் புத்தக விற்பனை நிலையத்தில் புத்தகங்களை திருடிய குற்றச்சாட்டில் நபர் ஒருவருக்கு கொழும்புக் கோட்டை நீதவான் நேற்று 26 மாத கடும் காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இந் நபர் ஏற்கனவே கொழும்பு பிரதம நீதவானினால் குற்றவாளியாகக் காணப்பட்டு இரு வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்ததாக கொம்பனித்தெருப் பொலிஸார் தெரிவித்தனர். இவர் ஒத்திவைக்கப்பட்ட தண்டனைக் காலத்திலேயே மீண்டும் குற்றமிழைத்தாகவும் பொலிஸார் கூறினர்.

இந் நிலையில் இந் நபருக்கு மேற்படி இருவருட கடுங்காவல் தண்டனையுடன் புதிய குற்றத்திற்காக மேலும் 2 மாத சிறைத் தண்டனையும் அனுபவிக்குமாறு நீதவான் திருமதி லங்கா ஜெயரட்ண உத்தரவிட்டார்.

அத்துடன் மூவாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இந் நபர் மூவாயிரத்தி 125 ரூபாய் பெறுமதியான புத்தகங்களை திருடியதாக மேற்படி புத்தக விற்பனை நிலையத்தின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார். (எ-8)

# இன்று ஒரு தகவல்

## சிரிப்பும் அழுகையும் ஒரே சமயத்தில்

அழகான அரண்மனை ஒன்றிலே ஒரு மன்னர் இருந்தார்.

அந்த அரண்மனையைவிட அழகான ஒரு மாளிகையை அந்த ஊரில் வேறு ஒருவன் கட்டியிருந்தான். அப்படிக் கட்டி முடித்ததில் அவன் அதிக பெருமை கொண்டிருந்தான்.

எத்தனையோ செல்வந்தர்கள் அவனிடம் வந்து, ''இந்த மாளிகையை விலைக்குக் கொடுங்கள்... எவ்வளவு விலை சொன்னாலும் நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்'' என்று கேட்டுப் பார்த்தார்கள்.

''நான் இதை விற்பதற்கு இல்லை'' என்று அவன் சொல்லிவிட்டான். ஏனெனில் அவன் அதைச் சிறப்பாகக் கலையம்சத்துடன் அரண்மனையைப் போலக் கட்டி முடித்திருந்தான்.

ஒருநாள் அவன் எங்கேயோ வெளியூர் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்போது அந்த மாளிகை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது.

அவன் பதறிப் போனான். 'விலைக்குக் கேட்டு வாங்க முடியாதவதர்கள் யாராவதுதான் இதைச் செய்திருக்க வேண்டும். அல்லது மன்னரே செய்த சதியோ, என்னவோ?' என்று அவன் குழம்பினான்.

இதனால் அவன் ஒரு மூலையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தான். அந்தச் சமயத்தில் அவனுடைய மூத்தமகன் அங்கே ஓடிவந்தான்.

''அப்பா அழாதீர்கள்! இந்த மாளிகையை நான் நேற்று இரவே நம் மன்னருக்கு விற்றுவிட்டேன். இதைக் கட்டி முடிக்க நமக்கு எவ்வளவு செலவானதோ, அதைப்போல மூன்று மடங்கு அதிகமான விலைக்கு விற்றுவிட்டேன். கவலைப்படாதீர்கள், இதைவிட அழகான மாளிகையை நாம் புதிதாக கட்டிக்கொள்ளலாம்!'' என்றான் அவன்.

இதைக் கேட்டதும் அழுது கொண்டிருந்த தகப்பன் அழுகையை நிறுத்தினான். சிரிக்க ஆரம்பித்தான்.

''இதே இடத்தை நான் மன்னனிடமிருந்து விலைக்கு வாங்குவேன், இதைவிட அழகான மாளிகையைக் கட்டுவேன்!'' என்று சுற்றி நின்ற எல்லோரிடமும் சொல்ல ஆரம்பித்தான்.

இந்தச் சமயத்தில் அவனுடைய இளைய மகன் பரபரப்புடன் ஓடிவந்தான். விடயத்தை அறிந்தான். பின்னர் அவன், ''அப்பா! அண்ணன் சொன்னதெல்லாம் சரிதான்... மன்னரிடம் விலை பேசினதெல்லாம் உண்மைதான்.''

''ஆனால் விற்றது பேச்சளவில்தான். இனிமேல்தான் பத்திரம் வாங்கி எழுத வேண்டும்; நீங்கள் கையெழுத்திட வேண்டும்; பின்னர் பதிவு செய்ய வேண்டும்; மன்னரிடம் பணம் வாங்க வேண்டும்; அதற்காகத்தான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்குள் நம் மாளிகை எரிந்துவிட்டது'' என்றான்.

சிரித்துக்கொண்டிருந்த தந்தை இப்போது சிரிப்பை நிறுத்தினான். மறுபடியும் சிறுவன் மாதிரி அழ ஆரம்பித்தான்! இது ஒரு சம்பவம்.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது?

அந்த அழகான மாளிகை தன்னுடையது என்று நினைத்தபோது அவனுக்கு அழுகை வந்தது. அது தன்னுடையது இல்லை என்று நினைத்தபோது சிரிப்பு வந்தது.

மறுபடியும் அது தன்னுடையதுதான் என்ற எண்ணம் வரும்போது அழுகை!

எது எதிலிருந்து நீ நீங்கியிருக்கிறாயோ, அது அதிலிருந்து உனக்குத் துன்பம் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

''உலகத்தில் இருங்கள், ஆனால் உலகத்தவராக இருக்காதீர்கள். உலகிற்குள் இருங்கள். உலகம் உங்களுக்குள் வந்துவிட அனுமதிக்காதீர்கள். விலகி இருங்கள், விழித்திருங்கள், மௌனமாய்ப் பார்த்திருங்கள்'' என்கிறார் ஒரு தத்துவஞானி.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ்.பிராந்திய காரியாலயத்திற்கு புதிய கட்டடம்

## பிரதி ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ். பிராந்திய பிரதிப்பணிப்பாளர் பி.சிவாஜி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ்.பிராந்தியக் காரியாலயம் தற்போது யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மூன்றாம் மாடியில் இயங்கி வருகின்றது.

இதனால் வரி செலுத்துவதற்கு வருபவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மாடிகளுக்கு செல்வதற்கு இலகுவாக இக்கட்டடத்தில் பார உயர்த்தி (லிப்ற்) வசதிகளும் இல்லை.

இதனால் முதியவர்கள், நோயாளர்கள் உட்பட பலர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைகருத்தில்கொண்டே இத்திணைக்களத்தின் யாழ்.பிராந்திய காரியாலயத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் அமைக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதோடு அது அமைக்கும் வரை வீரசிங்கம் மண்டபத்தின் மூன்றாம் மாடியிலேயே தொடர்ந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தின் யாழ்.பிராந்தியக் காரியாலயம் செயற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# இராசி பலன்

03.08.2011
(ஆடி 18, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 4.46 மணிவரை
உத்தரம் பின்னிரவு 2.10 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
நாக சதுர்த்தி விரதம்,
அமிர்த சித்தம்.

**மேடம்** நண்பர்கள் பாராட்டும் வகையில் நடந்து கொள்வீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், சுவாரஸ்யமான நாள்.

**இடபம்** விடியும் பொழுதே நல்ல செய்திகள் வந்து சேரும் நாள்,அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தொழில் விருத்தியுண்டு, பிள்ளைகளால் பெருமைப் படுவீர்கள்.

**மிதுனம்** தொழில் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள், வாகன சுக முண்டு, பெற்றோர் மீது கூடிய அக்கறை காட்டுவீர்கள்,சுபநிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படலாம்.

**கடகம்** சிந்தனை மிகுதியுண்டு,கூட்டு முயற்சி வெற்றி தரும்,தொழிலில் நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும்,குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்,பயணங்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** தொலைபேசித் தகவலால் உற்சாகமடைவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,விருந்தினர் வருகையால் விருப்பங்கள் நிறைவேற்றப்படலாம்,வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** உங்கள் முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**துலாம்** அலைச்சல்கள் சற்று அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம்,சயன சுகக்குறைவான நாள்,குடும்பத்தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்,செய்தொழிலால் வருமானம் அதிகரிக்கும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சியைத் தரும், உறவினர் வருகையுண்டு.

**தனுசு** வளர்ச்சி ஏற்பட சிலரிடம் ஆலோசனை கேட்பீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு,கௌரவமான நாள்.

**மகரம்** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், கைமாறாக கொடுத்த பணம் திரும்பி வரலாம், வருமானம் பெருக வரம் தரும் தெய்வங்களை நாடிச் செல்வீர்கள்.

**கும்பம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்,குறைவாகப் பேசினாலும் குறைகூறிப் பேசாமலிருப்பது நல்லது, எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிடலாம்,மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** நண்பர்கள் வட்டம் விரிவடையும்,நல்லவர்கள் தொடர்பால் நன்மையடைவீர்கள்,திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்,தொழில் வளர்ச்சி ஏற்படும் நாள்.

வளவன்

# உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம் இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் பணி இன்று புதன்கிழமையுடன் பூர்த்தியடைவதாக தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தினால் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

முன்னுரிமை சேவை அடிப்படையில் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் நாடளாவிய ரீதியிலுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் 4 நாட்களுக்குள் பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

இம்மாதம் 8 ஆம்திகதி வரை தமது பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காத மாணவர்கள் அருகிலுள்ள தபால் அலு வலகத்தில் அது பற்றி தொட ர்பு கொள்ளுமாறும் அங்கு இல்லாத பட்சத்தில் பரீட்சைகள் திணைக்களத்திடம் வினவ முடியுமெனவும் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க கூறினார்.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தின் மூலம் பிரதேச தபால் அலுவலகங்கள் ஊடாக தற்போது பரீட்சை அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 120 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 60 |
| தக்காளி | 40 | 40 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 40 | 40 | 40 |
| கரட் | 50 | 70 | 50 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 180 | 55 | 50 |
| பெரிய வெங்காயம் | 65 | 40 | 40 |
| பாகற்காய் | 70 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | -- |
| பயற்றங்காய் | 70 | 90 | 100 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 30 | 30 | 30 |
| கறிமிளகாய் | 50 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 60 | 90 | 80 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 35 | 90 | 20 |
| கீரை - 1 பிடி | 10 | 25 | 10 |
| தேசிக்காய் | 40 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 35 |

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி அருள்மிகு உலவிற்குளம் பிள்ளையார் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு நாட்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (எ)

## நூல் வெளியீட்டுவிழா

(நல்லூர்)

யோகரட்ணம் எழுதிய **தீண்டாமை கொடுமைகளும் தீமூண்ட நாட்களும்** எனும் நூல் வெளியீடு எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நூல் வெளியீட்டுரையை அசுராவும் மதிப்பீட்டுரையை ஓய்வுபெற்ற ஆசிரியர் .க. தங்கவடிவேல் ஓய்வுபெற்ற ஆசிரியர் தா.கந்தையா, யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.ராஜேஸ்கண்ணா, ந.தமிழமுகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பௌத்த சங்கத் தலைவர் எஸ்.ஐயாத்துரை நூலை வெளியிட்டு வைப்பதுடன் கணேஸ் றேடிங் சென்ரர் ஐ.மனோகரன் மாநகரசபை உதவி முதல்வர் து.இளங்கோ, ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-134)

## நூல் நிலையத்திற்கு கணனி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி நூல் நிலையத்திற்கு கணனி வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சரசாலை பிரதேசசபை நூல் நிலையத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீ மத் சுவாமி இராஜேஸ்வரானந்தா, சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் செல்வி தி.தர்சினி, தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி செயலாளர் சி.சிவயோகன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

அத்துடன் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனால் நூல் நிலையத்திற்கு கணனி வழங்கப்படவுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சின்ன மடுமாதா யாத்திரைத்தல திருவிழா

(யாழ்ப்பாணம்)

சின்னமடுமாதா யாத்திரைத்தல திருவிழா கடந்தமாதம் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதில் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி முதல் திருப்பலியும் 8 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் நடைபெறும். (ஸ்ரீ)

### உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால்

# வரி செலுத்துவோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தத் திட்டம்

வரி செலுத்துவோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்றை யாழ். மாவட்டத்தில் நடத்த உள்நாட்டு இறைவரித் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக திணைக்களத்தின் யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் பி.சிவாஜி தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அது தொடர்பாக விளக்கமளிக்கும் பொருட்டும் இந்தக் கருத்தரங்கு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறான கருத்தரங்கு இங்கு கடந்த வருடமும் நடத்தப்பட்டது.

இத்திணைக்களம் வருமானவரி, தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி, விருப்பத்துக்குரிய வரி, சேர்மதி வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணம் ஆகிய வரிகளை நிர்வகித்து வருகின்றது.

இவ்வரிகளுக்கு பொறுப்புடையோர் தாமாக முன்வந்து வரி சேவைகளை திறப்பதன்மூலம் உரிய வரிகளை செலுத்த முடியும்.

வரிகளை செலுத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் எமது திணைக்களத்தில் செய்யப்பட்டுள்ளது.

இவ்வரிமூலம் பெறப்படும் பணம் இப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் இலவச கல்வி வசதி, இலவச சுகாதார வசதி, வீதி அபிவிருத்தி எனப் பல தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

எனவே வரி செலுத்தும் அனைவரும் இதனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.கடந்த ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்தியக் காரியாலயத்தில் 164 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டது.

இதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் இத்திணைக்களம் நன்றி தெரிவிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுவினர் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளைப் பார்வையிடுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழு ஒன்று இன்று புதன்கிழமை விஜயம் செய்யவுள்ளது.

மேற்குறித்த குழுவினர் ஆசிய அபிவிருத்தி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற நீர்ப்பாசன வேலைகள், வீதிப்புனரமைப்பு வேலைகள் மற்றும் ஏனைய புனரமைப்பு வேலைகள் ஆகியவற்றை பார்வையிட்டு வேலைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

மண்டைதீவில் உள்ள உவர் நீர்தடுப்பணையையும் இக்குழுவினர் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

## முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுவிழா

(காரைநகர்)

காரைநகர் பிரதேச முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியாளவில் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் காரைநகர் பிரதேச முன்பள்ளி இணைப்பாளார் செல்வி அ.புஸ்பராணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக காரைநகர் அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான ந.பரமசிவம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-246)

## சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியோருக்கு ரூ.8 ஆயிரம் அபராதம்

(கரவெட்டி)

தென்மராட்சி பிரதேசத்தில் இரு வெவ்வேறு சம்பவங்களில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய இரு நபர்களுக்கு 8 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சிறைத்தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கொடிகாமம் பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபரையும் மற்றுமொரு சம்பவத்தில் சாவகச்சேரி பிரதேசத்தில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதியையும் கைது செய்த பொலிஸார் இருவரையும் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்.

வழக்கை விசாரித்த நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா இரு நபர்களும் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்த சாரதிக்கு 5 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் இரண்டு மாதகால சிறைத்தண்டனையும் வழங்கியதுடன்கொடிகாமப் பிரதேச சாரதிக்கு 2ஆயிரத்து 500ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத கால சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)




## முச்சக்கரவண்டி தடம் புரண்டு சாரதி படுகாயம்

(கரவெட்டி)

முச்சக்கரவண்டி தடம்புரண்டதில் சாரதி ஒருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு மந்திகை அல்லியம்பதி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கரவெட்டி பகுதியிலிருந்து மந்திகை நோக்கி சென்று கொண்டிருந்த வேளை நாய் குறுக்கே பாய்ந்ததில் முச்சக்கரவண்டி வேக கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் கரவெட்டி மந்திகையைச் சேர்ந்த கந்தசாமி ஸ்ரீஸ்காந்தராஜா (வயது-51) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

அத்தோடு இச்சம்பவத்தில் முச்சக்கரவண்டி பலத்த சேதத்திற்குள்ளாகியதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-24)


## அனுமதிப்பத்திரமின்றி அரசசாராயம் வைத்திருந்த நபருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி 12 ஆயிரத்து 750 மில்லிலீற்றர் அரசசாராயத்தை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்தநபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த தவறின் ஒருமாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார் (ஸ்ரீ-3)







வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையின் தமிழ்மன்ற வெளியீடான **வேம்பு** சஞ்சிகை வெளியீட்டுவிழா நேற்று பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் இப்பாடசாலையின் அதிபர் திருமதி க.பொன்னம்பலம் மங்கல விளக்கேற்றுவதையும் சஞ்சிகையின் முதற்பிரதியை யாழ்.பல்க லைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் என். சிவலிங்கராஜாவிடம் இருந்து தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுக்கொள்வதையும் மாணவிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.







ஜி.ரி.இசற் நிறுவனமும் வடமாகாண கல்வியமைச்சும் இணைந்து வேலணைப் பிரதேசத்தில் உள்ள ஆசிரியர்களின் தென்மோடிக் கூத்தினை வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடத்தினர். இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வேலணை வலயக் கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் உரையாற்றுவதையும் ஆசிரியர்களின் தென்மோடிக் கூத்து நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள் : என்.குமார்.)

# சுஷ்மா சுவராஜ் அடுத்தமாதம் இலங்கைக்கு விஜயம்



அடுத்த மாதம் தான் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக இந்திய பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடா நாட்டிற்கு சென்று நிலைமைகளை அவதானிக்க அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி அடுத்த மாதம் 17,18 ஆம் திகதிகளில் இந்ளளய வுள்ளார். இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சபாநாயகர் சமல் ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்திய எதிர்கட் சித் தலைவி இதனை குறிப்பிட்டதாக த ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது. இதேவேளை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அட்ங்கிய குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைக்கு இந்திய சபாநாயகர் மீரா குமார மன்னிப்பு கோரியுள்ளார்.

இலங்கை வாழ் தமிழ் பிரச்சினைகள் தொடர்பில் கௌரவமான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க இந்தியாவும் இலங்கையும் பூரண ஒத்துழைப்புடன் செயற்படும் என தான் நம்புவதாகவும் இந்திய சபாநாயகர் சுட்டிக்காட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# புகலிடக் கோரிக்கையாளர்களை பயமுறுத்தும் காணொளி வெளியீடு

(கொழும்பு)

மலேசியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி அவுஸ்திரேலியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள அகதிகளின் பயணத்தின் காணொளியினை வெளியிட அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு சட்டவிரோதமாக தஞ்சம் கோருபவர்களின் மனநிலையை சோர்வடையச் செய்யும் முயற்சியாக இந்தக் காணொளி வெளியிடப்படவுள்ளது.

அகதிகளை பரஸ்பரம் பரிமாறுகின்ற ஒப்பந்தத்தில் அவுஸ்திரேலியா-மலேசியா ஆகிய நாடுகள் கடந்த 25 ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளன. இவ்வொப்பந்தத்தின்படி அடுத்து வரும் நாலாண்டு காலம் வரை 800 அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்களை மலேசியாவிடம் அவுஸ்திரேலியா கையளிக்கும். அத்துடன் மலேசியாவில் உள்ள 4 ஆயிரம் அகதிகள் அவுஸ்திரேலியாவில் குடியேற்றப்படுவர்.

இவ்வாறான காணொளிகளை வெளியிடுவதன் போது ஆட்கடத்தல் காரர்களுக்கும் ஆட்கடத்தல்காரர்கள் மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய முற்படுபவர்களுக்கும் இது பலமான செய்தியாக அமையும் என்று குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நியாயமான முறையில் அரசின் புதிய் கொள்கைகளை மிகத் தெளிவாக விளக்குகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# நூலகத் திறப்பு விழாவும் சரஸ்வதி சிலை திரைநீக்கமும்

(கொழும்பு)

யாழ்/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் அமரர் முருகேசு சின்னத்துரை ஞாபகார்த்த நூலகத் திறப்பு விழாவும் சரஸ்வதி சிலை நீக்கமும் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆ.சி.நடராஜா கேட்போர் கூடத்தில் அதிபர் க.கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாடசாலைகள் வேலைப்பகுதி பொறியியலாளர் கு.சிவபாலன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், யாழ்ப்பாணம் அவிவா NDB பிராந்திய முகாமையாளர் க.செல்வராஜன், நேர்டோ செயலர் செ.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ)


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
17.05.1927

மறைவு
01.08.2011

## சின்னத்தம்பி சிவகுரு

கால்நடை உற்பத்தி சுகாதர திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராகிய திருமதி வக்சலாதேவி அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு தந்தையார் சின்னத்தம்பி சிவகுரு (இளைப்பாறிய அதிபர், B.A, Dip.in Education, J.P) அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

K. செந்தில்நாதன்,
A.D Office, Jaffna

(5714)






வெளிநாட்டிலிருந்து
பணம்
செலானில் பரிசு

உலகின் எந்த நாட்டிலிருந்து அனுப்பும் பணத்தையும் விரைவாகவும் இலகுவாகவும் பெற்றுக் கொள்வதோடு, இவற்றுக்கு பரிசுகளும் செலான் வங்கியிலுண்டு

- வங்கிக் கணக்குத் தேவையில்லை
- மிகக் கூடிய நாணயமாற்று வீதம்
- மிகக் குறைந்த கட்டணத்துடன் சினேகபூர்வமான சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

யாழ்ப்பாணம்,மானிப்பாய்,சங்கானை,மன்னார், கிளிநொச்சி,வவுனியா,சாவகச்சேரி, முல்லைத்தீவு, நெல்லியடி கிளைகளில் ஜுலை 30 ஆம் திகதி முதல் கையி ருப்பு முடியும்வரை பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்

MoneyGram Money Transfer · XPRESS MONEY Send now. Receive now. · ARY Speed Remit · NOW · INSTANT CASH GLOBAL MONEY TRANSFER · EzRemit · SEY CASH · AFX · PLACID EXPRESS

செலான் டவர்ஸ், இல.90, காலி வீதி, கொழும்பு 03
தொலைபேசி: +94 11 2456456, +94 11 4701000
தொலைநகல்: +94 11 2456456
மின்னஞ்சல் : info@seylan.lk
Brand Finance Rating "A" Fitch Rating: BBB+(lka)
கம்பனிப் பதிவிலக்கம் PQ 9

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

www.eseylan.com

# யாழ்ப்பாண தேர்தல் மாவட்டமும் குறைந்து வரும் பாராளுமன்ற பிரதிநிதித்துவமும்




பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D.Durham
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்.

இதனால் மாவட்டத்தில் இருந்த மக்கள் தொகையிலும் பார்க்க வாக காளர் எண்ணிக்கை கூடுதலாக இருந் ததும் குறிப்பிடத்தக்கது. மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், அவர்க ளது உண்மை நிலை அறிய முடி யாமல் இருந்ததால் இம்மாவட டத்திற்கு அரசால் சில சலுகைகள் வழங்கப்பட்டன. அமைதி திரும்ப, மக கள் தம்மிடம் மீள்வர் என்றும் அதற்கு பின னர் வாக்காளர் பட்டியல் தயாரிக்கலாம் என்றதொரு நிலைபபாட்டில் இந்த சிறப்பு நிலைமை இருக்கட்டும் என விடப்பட்டது.நாட்டுச்சூழ்நிலையில் முன்னேற்றம் ஏற்பட முன்னர் அளித்த சலுகைகள் குறைக்கப்பட்டன. இதனால் 2010ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் தயாரித்த பொழுது மரணித்தவர்கள், குடும்ப மாக வெளிநாடு சென்றோர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கு நிரந்தர இடம்பெயர்ந்தோர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். எனினும் பாதுகாப்பு வலயப் பகுதி களில் இருந்து இடம்பெயர்ந்த வாக்காளர் விபரம் முன்னைய மாதிரியே வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக காங்கேசன்துறை வாக்களிப்பு பிரிவில் பல கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தும் மீளக்குடி யேறாமல் அகதிகள் முகாம் மற்றும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் இருக்கின்றனர். இதனால் இத்தொகுதி யில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் பழைய முறை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டதாக தெரிய வருகின்றது. மீள் குடியேற்றம் முடிவுற்றதும் அடுதுவரும் ஆண்டு களில் வாக்காளர் பட்டியலில் சீர்செய்யப்படும் பொழுது இக்குறை பாடுகள் நீக்கப்படலாம். இதன் மூலம் இம்மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை மேலும் குறைவடை யலாம்.

பதினொரு தேர்தல் வாக்களிப்புப் பிரிவில் காங்கேசன்துறை, கிளி நொச்சி இரண்டுமே 1986இல் இருந்த வாக்காளர் தொகையிலும் கூடுதலாக கொண்டுள்ளன. 1986ஆம் ஆண்டு வாக்காளர் விபரம் தொகுதி நிர் ணயத்திற்குப் பயன்படுத்தப்பட்டதால் இவ்விபரங்கள் காத்திரமானதாகக் கொள்ளக்கூடியவை. காங்கேசன் துறை தேர்தல் வாக்களிப்புப் பிரிவில் வாக்காளர் பட்டியல் பழைய முறையில் பார்க்கப்பட்டதால் எண்ணிக்கை உயர்வாக இருக்கின் றது. கிளிநொச்சி வாக்களிப்பு பிரிவில் உள்ளக இடப்பெயர்வால் மக்கள் தொகை அதிகரித்து அதன் வழியாக வாக்காளர் எண்ணிக்கை அதிகரித்து ள்ளது. மேலும் அண்மையில் இடம்பெ யர்ந்த கிளிநொச்சி பிரதேச மக்கள் இப்பகுதியில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி காரணமாக மீளக்குடி யேறும் பொழுது இப்பிரிவில் வாக்காளர் எண்ணிக்கை வருங்காலத தில் குடாநாட்டு தேர்தல் வாக்களிப்புப் பிரிவுகிளிலும் பார்க்கக் கூடுதலாக ஏற்படலாம். குடாநாட்டிற்குள் ஊர் காவற்றுறை வாக்களிப்பு பிரிவே மிகக்கூடிய இழப்பை (56.2%) சந்தித்துள்ளது. இதற்கு அடுத்ததாக யாழ்ப்பாணம் (36.9%) நல்லூர் (30.6%) பிரிவுகளிலும் கூடுதலான இழப்பைச் சந்தித்துள்ளன.

வாக்காளர் எண்ணிக்கை குறைவ டைந்தால் ஏற்படும் பிரச்சினைகள் என்ன – பிரதிநிதிகள் எண்ணிக்கை எவ் வாறு தீர்மானிக்கப்படுகின்றன எனப்பார்ப்போம். வாக்காளர் எண் ணிக்கை குறைவடையும்போது பிரதிநிதிகள் எண்ணி க்கை குறைவடையும். தற்பொழுதுள்ள நடை முறைப்படி பாராளுமன் றத்தில் உள்ள 225 அங்கத்தவர்களில் 160பேர் வாக்காளர் அடிப்படையிலும் 36பேர் 9 மாகாணங்களுக்கு தலா 4 பேர் விகிதமும், மிகுதி 29பேர் தேசியப பட்டியல் வழியாகவும் இருப்பர். 225பேரில் 196 பேர் 22 தேர்தல் மாவட் டங்களில் இருந்து மாவ ட்ட விகிதாசார தேர்தல் முறைமூலமும் 29பேர் தேசிய விகிதாசார தேர்தல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவர். அட்டவணை 1இல் மாவட்ட அடிப்படையில ஒதுக்கப்பட்ட ஆசனங் களின் விபரம் பின்வரு மாறு:

வாக்காளர் அடிப்ப டையில் 160 பிரதிநிதி களை மாவட்டங்களு க்கு ஒதுக்க பின்வரும் நடைமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் தேசிய ரீதியில் வாக்காளர் பட்டியல் ததயாரிப்பு முடிவடைந்த பின்னர் மொத்த தேசிய வாக்காளர் எண்ணிக்கையை 160ஆல் பிரிக்க ஒரு பிரதிநிதிக்குரிய வாக்குப்பெறுமானம் கிடைக்கும். 1980களில் ஒரு பிரதி நிதிக்குரிய வாக்காளர் எண்ணிக்கை 75000 வரையில் இருந்தது. நாட்டின் மக்கள் தொகை அதிகரித்து அதன் வழியாக வாக்காளர் தொகை அதிக ரித்ததினால் இன்று ஒரு பிரதிநிதிக் குரிய வாக்காளர் எண்ணிக்கை ஒரு இலட்சம் வரை இருக்கின்றது. யாழ்ப பாண தேர்தல் மாவட்டம் 484791 வாக் காளர்களைக் கொண்டுள்ளதால் 5 பாராளுமன்ற பிரதிநிதிகளை வாக காளர் அடிப்படையில் பெற்றது. மேலும் 160 பிரதி நிதிகளை 22 மாவட் டங்களுக்கும் பகிரும்பொழுது முதல் சுற்றில் 160ஐயும் பகிர முடியாது. இத னால் முதல்சுற்றில் பகிர்ந்ததைத்தவிர எஞ்சிய எண்ணிக்கையை கூடிய மிகுதி தொகை அடிப்படையில் ஒதுக் கப்படும். மேலும் ஒவ்வொரு வருடமும் இச்செயற்பாடு இடம்பெறுவதால் தேர தல் மாவட்டங்களுக்குரிய பிரதிநிதி களின் எண்ணிக்கை வருடாவருடம். மாறுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. குடி உள்வரவும் உத்தம வினைத்திறனான பதிவுகளால் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிக்கும் போதும் பிரதிநிதிகள் எண்ணிக்கை கூடிக்கொண்டும் குறை ந்து செல்லும் இடத்து பிரதிநிதிகள் எண்ணிக்கை குறைந்தும் செல்லக் கூடியநிலை ஏற்படும். யாழ்ப்பாண தேர் தல் மாவட்டம் 1989இல் 11 அங்கத்தவர் களைக் கொணடிருந்தது. பின்னர் 1990 களில் 10ஆகக் குறைந்தது. இன்று 9ஆகக் குறைந்துள்ளது. 2010ஆம் ஆண்டு வாக்காளர் எண்ணிக்கை அடிப் படையில் 6ஆகக்குறையும். எஞ்சிய வாக்கின் குருட்டுயோகத்தால் ஒன்று கிடைக்குமாயின் 6 அங்கத்தவர் கிடை ப்பது நிச்சயமாகும். இந்நிலை புதிய பாராளுமன்றத் தேர்தலிலே புதிய நிலைப்பாடு நடைமுறைக்கு வரும்.




1947இல் 75000 மக்களுக்கு ஒரு பிரதிநிதியும் 1000 சதுரமைலுக்கு ஒரு பிரதிநிதியும் என கணிக்கப்பட்டது. இதில் 75000இல் அரைவாசிக்கு மேல் மக்கள் தொகை இருக்குமாயின் அது வும் ஒரு முழுத்தொயையாகக் கணிக்கப் பட்டது. மேலும் பரப்பு அடிப்படையில் ஒதுக்கப்பட்ட ஆசனங்களால் கூடிய பரப புக்கொண்ட மாகாணங்கள் நன்மை பெற்றன. மேல்மாகாணம் - 1, மத்திய மாகாணம் - 2,. தென் மாகா ணம் - 2, வட மாகாணம் - 4, கிழக்கு மாகா ணம் - 4, வடமேல் மாகாணம் - 3, வட மத்திய மாகாணம் - 4, ஊவா மாகா ணம் - 3, சப்ரகமுவ மாகாணம் - 2. இதனால் வடமாகாணத்திற்குக் கிடைத்த நான்கு தொகுதி மூலம் யாழ்ப்பாண மாவட்டம் பலனடைந்தது. ஆனால் இன்று வடமாகாணத்திற்கு ஒதுக்கிய நான்கு அங்கத்தவர்களில் மூன்று வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. இச்செயற்பாட்டாலும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் பயனடையவில்லை. 1976ஆம் ஆண்டு தொகுதி நிர்ணய ஆணைக்குழு 75000 மக்களுக்கு ஒரு அங்கத்தவர்களது நிலைப்பாட்டை 90000 மக்களுக்கு ஒரு அங்கத்தவர் என அதிகரித்தபொழுது புதிதாக ஒரு தொகுதியைப் பெறவி ல்லை. 1959ஆம் ஆண்டு தேர்தல் தொகுதிகள் நிர்ணயத்தில் கிடைத்த 11 தொகுதிகளே 1976இல் சிறுசிறு எல்லை மாற்றங்களுடன் தொடர்ந திருந்தன.

1947இல் 95 அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்ட, அங்கத்தவர்கள் உட்பட 101பேர்களைக்கொண்ட பாராளுமன்றத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 7 அங்கத்தவர் கள் தெரிவுசெய்யப்பட்டனர். 1960இல் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 157 இருந்தபொழுது 11 அங்கத்தவர் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர். 1989இல் அங்கத்தவர் எண்ணிக்கை 225 அதிகரித்தபொழுது 11 அங்கத்தவர்க ளாக இருந்து பின்னர் 10ஆகி, தற்பொழுது 9ஆக இருக்கின்றது. வரும்காலத்தில் 6ஆக வரக்கூடிய நிலை உருவாகியுள்ளது. அடுத்த அடுத்த வருடங்களில் வாக்காளர் பட்டியலில் மேலும் திருத்தம் செய்யப்படும்பொழுதும் வாக்காளர் எண்ணிக்கை ஒரு பக்கத்தில் குறையவும், மற்றைய மாவட்டங்க ளில் குடிசன அதிகரிப்பால் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதிநிதி கள் எண்ணிக்கை மேலும் குறைய லாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதி நிதித்துவம் குறைவடையாமல் தவி ர்ப்பதற்கு பின்வரும் நடவடிக்கை கள் தேவை.

1.யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை யை சில காலங்களுக்கு விசேட ஏற் பாட்டின் கீழ் அங்கத்தவர் எண் ணிக்கை குறைக்காமல் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இருக்கின்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கையை குறைக்காமல் தொடர்கின்ற நடைமுறை பல நாடுக ளில் உண்டு. உதாரணமாக இந்தியா வில் தமிழ் நாடு கேரளா மாநிலங்கள் குடும்பக்கட்டுப்பாட்டை சிறப்பாக முன் னெடுப்பதனால் அவர்களின் குடிசனத தொகை வளர்ச்சி குறைவடைந்தது. இதனால் இந்த மாநிலங்களின் பாரா ளுமன்ற பிரதிநிதித்துவம். சனத் தொகை அடி ப்படையில் குறைத்துக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட டது. ஒரு திட்டத்தை சிறப்பாக செய் தததற்கான தண்டணையா என மாநி லங்கள் வினா எழுப்பி பழைய பாரா ளுமன்ற அங்கத்துவ எண்ணிக கையை தொடர்ந்தும் தக்கவைத் துள்ளனர். இது போல் யுத்தத்தால் பாதிக்கப பட்ட தேர்தல் மாவட்டங களில் பிரதிநிதிகளின் எண்ணிக்கை சில காலங்களுக்கு குறைக்காமல் இருக்க வேண்டிய நியாயங்கள் உண்டு. இந்நியாயத்தை முன்னெடுத்து மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை தக்க வைக்க வேண்டும்.

2. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத் தில் வாழும் 18 வயதிற்கு மேற்பட்ட மக்கள் யாவரும் வாக்காளராக பதிவு செய்யப்பட வேண்டும். இதற்கான பரப் புரையை பல முறைகளில் முன்னெ டுத்து மேற்கொள்ள வேண்டும்.

3.யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந தவர்கள் குறிப்பாக வடமாகாணத் திற்கு வெளியில் வாழ்பவர்கள.

(15 ஆம் பக்கம் பார்க்க...)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள்

யாழ் பிரபல ஆசிரியர்

பகுதி – II

01. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அவரவரின் வீட்டிலொரு
அழகுப் பூங்கா அமைப்போம்!
ஆடு மாடு மேய்ந்திடாமல்
அதற்கொரு வேலி அமைப்போம்!
விபரமாகக் களைகளையும் நாம்
வேருடன் பறிப்போம்!

வீரியமாய் வளர உரம்
விதைத்து நீரும் இறைப்போம்!
புவி நெகிழும் படியழகுப்
பூஞ்செடிகள் வளர்ப்போம்!
புத்தம் புதுப் பூக்களங்கு
பூக்கக் கண்டு களிப்போம்!

01) பாடலிலுள்ள பெயரடைமொழி ஒன்று எழுதுக.
..........................................................................

02) "கண்டு களிப்போம்" என்பதன் கருத்து யாது?
..........................................................................

03) உயர்திணை தன்மைப் பன்மை எதிர்கால வினைச்சொற்கள் இரண்டு தருக.
..................................., ...................................

04) பயிர்களுக்கிடையில் தேவையற்று வளர்பவை எவ்வாறு அழைக்கப்படும்?
..........................................................

05) "பூங்கா" என்பதன் ஒத்த சொல் தருக.
..........................................................

06) பயிர்கள் வீரியமாய் வளர யாது செய்ய வேண்டும்?
..........................................................................

07) "பூங்கா அமைப்போம்" என்பதை ஒருமை வாக்கியமாக எழுதுக.
..........................................................................

08) மாடு என்பதன் ஆண், பெண் மரபை எழுதுக?
ஆண் ............................ பெண் ...............................

09) "வீட்டிலொரு" என்பதைப் பிரித்தெழுதுக.
..........................................................

10) அழகு என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.
..........................................................

02. தனி வாக்கியங்களை தொடர்வாக்கியமாக எழுதுக.

01. 1) காவியா பாட்டுப் பாடினாள்.
2) காவியா நடனம் ஆடினாள்
..........................................................................

02. 1) உழவன் வயலை உழுதான்.
2) பின் தானியங்களை விதைத்தான்.
..........................................................................

03. ஒழுங்குபடுத்தி எழுதுக.

1) வாய்ப்பகுதி / இருத்தல் / பலூனின் / வெளிப்புறம் / வேண்டும்
..........................................................................

2) நல்ல / இருந்தே / பின்பற்றுவோம் / சிறுவயதில் / அறிவுரைகளைப்
..........................................................................

04. கருத்தை எழுதுக.

1) அவசரக்குடுக்கை
..........................................................................

2) ஆழமறியாமல் காலை விடாதே
..........................................................................

05. நியம மொழியில் எழுதுக.

1) சவுக்காரம் :- ............................................
2) எண்ணை :- ............................................

06. தனிச்சொல்லில் விடை எழுதுக.

1) அரண்மனையில் பெண்கள் வசிக்குமிடம் :- ............................
2) கடவுள் இல்லை என வாதிடுபவன் :- ................................

07. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1) தோட்டம் :- .........................................
2) பொழுதுபோக்கு :- ..................................
3) பூக்கள் :- .........................................

08. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தைத் தமிழில் எழுதுக?

1) Monitor :- ............................................
2) Watcher :- ............................................
3) Please be silent :- ............................................

09. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் தமிழ்க் கருத்தை எழுதுக.

1) மே மகே பொத்த :- ............................................
2) கிரவா கொல பாட்டய் :- ............................................


10. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான சிங்களச் சொல்லை சிங்கள உச்சரிப்பில் எழுதுக?

1) சோறு சாப்பிடுங்கள் :- ............................................
2) ஆசிரியர் :- ............................................

11. பின்வரும் வீதிக்குறியீடுகள் குறிப்பனவற்றை எழுதுக.


1)  (...........................)
2)  (...........................)


12. பின்வரும் வித்துக்களின் பெயர்களை எழுதுக.
( முருங்கை, பருத்தி, எருக்கலை, வெடிபலவன் )


(...........................)


(...........................)

13. பின்வரும் உடுத்தொகுதியின் பெயர்களை எழுதுக.
( பெருநாய், சிம்மம், பெருங்கரடி, சிறுகரடி )


(...........................)


(...........................)

14. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறுவது,
1) நண்டு 2) ஆமை 3) மீன் 4) இறால்

02. பொருளாதார நன்மை தருபவை
1) தேனீ, பசு, கோழி
2) நாய், பூனை, பறவை
3) காகம், மண்புழு, ஆந்தை
4) பசு, நாய், ஆந்தை

# கரைவலைத் தொழிலில் ஈடுபட்டு வந்த தமிழர்களின் உரிமங்கள் சிங்களவர்களுக்கு

## முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தில் கரைவலை தொழிலில் ஈடுபட்டு வந்த தமிழர்களின் உரிமங்கள் சிங்கள மீனவர்களுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அங்கு தமிழர்கள் எவரும் கரைவலைத் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை என்றும் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து அவர்கள் தெரிவிக்கையில்,

கொக்கிளாயிலிருந்து கொக்குத் தொடுவாய், நாயாறு, செம்மலை, அலம்பில், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் முன்னர் இருந்த 44 கரைவலை பாடுகளில் சில பாடுகளுக்கே சிங்களவர்கள் உரிமங்களை வைத்திருந்தனர்.

ஏனைய பாடுகளுக்குரிய உரிமத்தை தமிழர்களே வைத்திருந்ததாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் உறுப்பினரான முன்னாள் கல்வியதிகாரி அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார்.

1984 இல் தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் வெளியேற்றப்பட்டு அங்கு சிங்கள மீனவர்கள் வரவழைக்கப்பட்டு கரைவலை உரிமங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

முன்னர் முல்லைத்தீவில் 44 பாடுகளே இருந்தன. இன்று அவை 150 ஆக அதிகரித்துள்ளதாக அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார்.

இந்தநிலையில் அண்மையில் கொக்கிளாய் பகுதிக்கு உரிம ஆவணங்களை எடுத்து சென்ற தமிழ் மீனவர்களிடம் சிங்கள மீனவர்கள் குறித்த பாடுகளுக்கான தமது உரிமங்களை காட்டியுள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதாக ஜெகநாதன் குறிப்பிட்டார். எனினும் இந்தக் குற்றச்சாட்டை மீன்வளத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன மறுத்துள்ளார்.

அந்தப் பகுதியில் பாரம்பரியமாக மீன்பிடித்து வந்து விடுதலைப்புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட அந்தப் பகுதியைச் சேர்ந்த சிங்கள மீனவர்களுக்கு மாத்திரமே அங்கு மீண்டும் கரைவலைத் தொழில் அனுமதி வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

அதுதவிர தென்பகுதியில் இருந்து எவரும் புதிதாக அங்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் தமிழர்களின் உரிமங்கள் சிங்களவர்களுக்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படுவதில் உண்மை எதுவும் கிடையாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கூறும் தமிழ் மீனவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அமைச்சர் கூறினார். (ஸ்ரீ-2)

## அகில இலங்கை சைவ மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கைச் சைவ மாநாடு எதிர்வரும் 5,6,7 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந் துள்ள சைவ பரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சென்னைப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை முன்னாள் முழுநேர வருகைப் பேராசிரியர் முனைவர் நல்லூர் சா.சரவணன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் சைவாபிமானிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ)



யா/ விக்டோறியா கல்லூரிக்கு பழைய மாணவர் சங்கத்தால் பாண்ட் வாத்திய கருவிகள் அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டது. இதில் வழங்கப்பட்ட பாண்ட் வாத்திய கருவிகளுடன் பாடசாலை மாணவர்களும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களும் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# மாந்தை கிழக்கில் மீளக்குடியமர்ந்த 250 பேருக்கு வாழ்வாதார உதவிகள்

(கொழும்பு)

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 205 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பாண்டியன் குள மகா வித்தியாலயத்தில் வழங்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஜி.ஜோண்பிள்ளை தெரிவித்தார்.

இவ் உதவிகளில் 150 பேருக்கு விவசாயம் மேற்கொள்வதற்கான நீர் இறைக்கும் இயந்திரமும் 100 பேருக்கு கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, தையல் இயந்திரம், ஆடுவளர்ப்பு ஆகியவற்றில் அவர்களால் விரும்பப்படுகின்ற ஏதாவது ஒரு உதவியும் வழங்கப்படவுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே இவ் உதவிகள் வழங்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3)

# குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டால் பதவியை இராஜினாமா செய்யத்தயார்

## அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவிப்பு

தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றசாட்டுகள் நிருபிக்கப்பட்டால் பதவியை இராஜினாமா செய்வதாக அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.



தன்னார்வ தொண்டு நிறுவன ஊழியர் பட்டாணி ராசிக்கின் படுகொலை சம்பவத்திற்கு தனக்கு எதுவித தொடர்பும் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பட்டாணி ராசிக்கின் படுகொலை சம்பவத்துடன் ஏதேனும் ஒரு வழியில் நாம் தொடர்புபட்டிருப்பதாக நிருபிக்கப்பட்டால் அரசியலிருந்து ஒதுங்கிக் கொள்ளபோவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் முஹமட் நௌசாட் புனர்வாழ்வு அமைச்சில் ஒன்றரை வருட காலம் பணியாற்றியதாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

எனினும் குறித்த நபர் தம்மிடம் பணியாற்றவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை வாகனக் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாக முதலில் குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் விசாரணைகளின் போது தனியார் வாகனமொன்றிலேயே கடத்தல் சம்பவம் இடம்பெற்றமை நிருபிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனத்தை செலுத்திய சாரதியையும் பொலிஸார் ஏற்கனவே கைது செய்துள்ளனர்.

புத்தளம் பிரதேச இடம்பெயர் முஸ்லிம்களுக்கும் பிரதேச முஸ்லிம்களுக்கும் இடையில் பிளவினை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சி மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இவ்வருடம் டெங்கு நோயால் உயிரிழந்தோர் 112 ஆக அதிகரிப்பு

## அரசாங்க நோய்ப்பரம்பல் பிரிவு தெரிவிப்பு

இந்த வருடத்தில் முதல் 7 மாதங்களில் டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்வடைந்துள்ள அதேவேளை 13 ஆயிரத்து 975 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க நோய்ப்பரம்பல் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 51 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ள அதேவேளை 5 ஆயிரத்து 454 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2 ஆயிரத்து 031 பேர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். களுத்துறையில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 767 பேர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

கண்டியில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன் 461 பேர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 57 பேர் உயிரிழந்துள்ள அதேவேளை 5 ஆயிரத்து 454 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். காலியில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 453 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். மாத்தறையில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 298 பேர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 9 பேர் உயிரி ழந்துள்ளதுடன் 651 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

குருநாகலையில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 528 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். புத்தளத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 322 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இரத்தினபுரியில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 551 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியவர்களை தனியாக கவனிப்பதற்காக 72 வைத்தியசாலைகளில் விசேட சிகிச்சைப் பிரிவை சுகாதார அமைச்சு ஆரம்பிக்கவுள் ளது.

டெங்கு நோய்த் தொற்றைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை 52 கிராமப்புற வைத்தியசாலைகளுக்கு வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை டெங்குநோய் பரவுதலை தடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்திடம் சுகாதார அமைச்சு உதவி கோரவுள்ளது. (ஸ்ரீ-2)

# அங்கவீனமுற்றோரின் குடும்பங்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

## சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அங்கவீனமுற்றோரின் குடும்பங்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த செயற்றிட்டம் நடைமுறைப்ப டுத்தப்படுவதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

அதற்காக 419 மில்லியன் ரூபா அமைச்சிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் இருந்து நிலுவைக் கொடுப்பனவுகளுடன் அந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும் இந்த செயற்றிட்டம் குறித்து அனைத்து பிரதேச செயலகங்களிலும் உள்ள அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மனதை பிரயோகித்தல்



ஆன்மீகம் 08

பிரமாண்டமான இடம் ஒன்று தயாரானது. தெனாலி ராமகிருஷ்ணர் மொத்த ஏற்பாட்டையும் தன் மேற்பார்வையில் செய்தார். நம்பகமான ஒரு வேலையாளை மட்டும் வைத்துக்கொண்டு அந்த இடத்திற்கான முழு ஏற்பாட்டையும் தான் விரும்பிய விதமாக உருவாக்கினார். தன் முன்னோர்களுக்கு சேவை செய்யும் பொருட்டு தெனாலிராமன் அர்ப்பணிப்பு உணர்வோடு இருப்பதைக் கண்டு கிருஷ்ணதேவராயர் நெகிழ்வடைந்தார். குறிப்பிட்ட நாளன்று தெனாலி வைக்கோல் போருக்கு சென்றவுடன், அதன்மீது சந்தனக் கட்டைகள், கற்பூரம், நெய் ஆகியவை மலையாகக் குவிக்கப்பட்டு தீயிடப்பட்டது. மூன்று நாட்கள் எரியூட்டப்பட்ட பிறகு அங்கே சாம்பலைத் தவிர வேறெதுவுமில்லை. தெனாலி ராமகிருஷ்ணர் மறைந்துவிட்டார். பல மாதங்கள் கடந்தன. அந்த காகம் மறுபடியும் வராததால் முன்னோர்களுக்கு என்னவாயிற்று என்பது கிருஷ்ண தேவராயருக்கு தெரியாமலே இருந்தது. காகங்கள் வரும்போதெல்லாம் "அவை என்ன கூறுகின்றன?" என்று நாவிதரிடம் கேட்டுக் கொண்டே இருந்தார். நாவிதரோ "இது தூது வந்த காகம் அல்ல, சாதாரண காகம்" என்று கூறிக் கொண்டே வந்தார்.

எட்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள், கிருஷ்ணதேவராயர் அரசவையில் சபையினரோடு இருக்கும்போது நீண்டு வளர்ந்த தலைமுடியோடும், தாடியோடும் தெனாலிராமன் வந்தார். கிருஷ்ணதேவராயர் முன் தலை வணங்கினார். தெனாலிராமன் சொர்க்கத்திலிருந்து திரும்பி வந்ததால் கிருஷ்ணதேவராயர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, "என் முன்னோர்கள் நலமா? அவர்களைச் சந்தோஷமாக வைத்திருக்கிறாயா?" எனக் கேட்டார் தெனாலிராமன். "நான் அவர்களை சந்தோஷமாக வைத்திருக்கிறேன். உண்மையில் அவர்கள் ஒவ்வொன்றையும் அனுபவிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரே ஒரு பிரச்சினை மட்டுமிருக்கிறது. சொர்க்கத்தில் நாவிதர்கள் இல்லை. (பங்கேற்பாளர்கள் சிரிப்பு). என்னைப் பாருங்கள், என்னால் சவரம் செய்ய முடியவில்லை. தங்கள் முன்னோர்களும் பல வருடங்களாக அப்படியே இருப்பதால் தங்களின் நீளமான தாடியாலேயே தடுக்கி விழுகின்றனர். அதனால் சிரமப்படுகின்றனர். அவர்களின் தாடியை கழுத்தைச் சுற்றிவிட்டுக் கொள்கின்றனர். உண்மையில் அது அவர்களுக்குப் பெரிய பிரச்சினை. அவர்களுக்கு ஒரு நல்ல நாவிதர் தேவை. நாம் நல்லதொரு நாவிதரை அனுப்ப வேண்டும் என்றார். நல்ல நாவிதர் என்றாலே அரண்மனையில் இருக்கும் நாவிதர் தான். எனவே கிருஷ்ணதேவராயர், "நான் என்னுடைய தனிப்பட்ட நாவிதரை அனுப்புகிறேன்" என்றார். இதைக் கேட்ட நாவிதர் நடுநடுங்கி, ஐயோ, அரசே! மன்னியுங்கள். எனக்கு காகபாஷை தெரிந்ததாகக் காட்டிக் கொண்டது தவறுதான் என்று கூறி கிருஷ்ண தேவராயர் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

எதனுடனாவது அடையாளப்பட்டு விட்டால் உங்கள் புரிதல் வெகுவாகச் சிதைவுபடுகிறது. பிறந்த முதல் நாளிலிருந்து குடும்பத்துடன் உங்கள் அடையாளத்தை ஆழப்படுத்தவும், நீங்கள் அவர்களை மட்டுமே சார்ந்தவர் என்பதை உணர்த்தும் வகையிலும், உங்கள் பெற்றோர் பிரச்சாரம் செய்கின்றனர். உங்கள் சமூகம், சாதி, மதம் ஆகியவற்றில் உங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்த வேறு சிலர் பிரச்சாரம் செய்கின்றனர். உங்கள் தேசத்திற்காக நீங்கள் உயிரிழக்க சிலர் பிரச்சாரம் செய்கின்றனர். எதனுடனாவது நீங்கள் வெகு ஆழமாக அடையாளம் கொண்டு அதன் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பல நிலைகளில் மனிதர்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்கின்றனர். நீங்கள் சுதந்திரமான மனிதராக இருப்பதை யாரும் விரும்பவில்லை. ஏனெனில் சுதந்திரம் குறித்து அவர்கள் அஞ்சுகிறார்கள். சுதந்திரமான ஒருவர் பொறுப்பற்ற செயல்களில் ஈடுபடுவார் என்று நினைக்கின்றனர். ஆனால் ஒருவர் சுதந்திரமில்லாமல் இருக்கும் போதுதான் பொறுப்பற்ற செயல்களைச் செய்கிறார். ஒருவர் உண்மையில் சுதந்திரமாக இருக்கும் போது பொறுப்பில்லாததை எதற்காக செய்யவேண்டும்? தீமை தரக்கூடியதை எதற்காகச் செய்ய வேண்டும். மனதளவில் சுதந்திரமில்



லாமல் இருப்பதால் தான் ஒருவர் தீமையான செயல்களைச் செய்கிறார் இல்லையா? அவருடன் மட்டுமே அவர் அடையாளம் கொண்டதால்தான் அவரால் வேறு யாருக்கோ தீங்கு செய்யமுடிகிறது. ஒருவர் உடலுடன் அடையாளம் கொள்ளாவிட்டால் அப்படிப்பட்ட மனிதரிடமிருந்து எந்தத் தீங்கும் ஏற்படாது. நிச்சயமாக தீமை வெளிவராது. (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# என் படைப்புக்குள் ஒலிந்துகொண்டிருக்கும் நான்

அஞ்சுவண்ணத்தார் என்ற சொல் முஸ்லீம்களை குறிப்பிடுவதாகும். வரலாற்று நூல்களிலும் பழைய கல்வெட்டுகளிலும் முஸ்லீம்களை அஞ்சுவண்ணத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டில் ஸ்தாணு இரவிவர்மா மன்னர் கிஸ்தவர்களுக்கு எழுதிக் கொடுத்த கொல்லம் தரிசாப் பள்ளிசெப்பேட்டில் சாட்சிகளாக 11 அஞ்சு வண்ணத்தாருடைய பேர்கள் கூஃபி (அறபி)

## தோப்பில் முஹம்மது மீரான்
## தமிழ் நாடு

லிபியில் பொறிக்கப்பட்ட செப்பேடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பகுதியிலுள்ள சில தெருக்கள் அஞ்சுவண்ணம் தெரு என்ற பெயரில் அழைக்கப்படுவதை பல ஊர்களில் இன்றும் பார்க்க முடியும். அஞ்சு வண்ணம் என்பது வரலாற்று ரீதியாக முஸ்லீம் சமுதாயத்தின் ஒரு அடையாளமாக இருப்பதால் இந்த நாவலுக்கு அஞ்சு வண்ணம் தெரு என்ற தலைப்பைக் கொடுத்தேன்.

என்னுடைய சிறுகதைகளைப்பற்றி இங்கு பேசாதது கட்டுரையின் விரிவைக் கருத்தில் கொண்டு என்னுடைய பிற்காலக் கதைகள் அந்நிய, உள் நாட்டு, பன்னாட்டு நிறுவன ஆதிக்க சக்திகள் நம் மண்ணில் தடம்பதித்து இயற்கை வளங்களைச் சுரண்டுவதற்கு எதிரான பதிவுகளாகும். நமது பாரம்பரியமும் நாகரீகமும் பண்பாடும் கால ஒட்டத்தில் துரித கதியில் அழிக்கப்படுவதற்கு எதிரான, இயற்கை அழிப்பிற்கு எதிரான கண்டனமும் எச்சரிக்கையும் நிறைந்தவை. கூட்டுக் குடும்ப நொறுங்கலுக்குப் பின் பறவைக்கூண்டு வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட வயோதிபர்களின் மனக்குமுறல்கள் என் சிறு கதைகளில் ஒலிக்கக் கேட்கலாம். ஒடுங்கி உட்கார மரக்கொப்புகள் இல்லாமல் அவதிக்குள்ளாகும் பறவைகளின் கண்ணீரில் நனைந்தவை என் கதைகள்.

என் நாவலானாலும் சிறு கதைகளானாலும் "நேர்கோட்டு எதார்த்தவாத" படைப்புகளாகும். என் மொழிநடை, பிற படைப்பாளிகளுடைய மொழிநடையிலிருந்து சற்று வேறுபட்டதாகவே இருக்கும். சுரண்டுதலுக்கும், ஒடுக்குதலுக்கும் இரையான எங்கள் கிராமத்து மக்களுடைய வாழ்க்கைத் துயரங்களை அவர்களுடைய இரத்தத்திலும் வியர்வையிலும் கலந்துவிட்ட கிராமிய மணம் வீசும் மொழியாகத்தான் இருக்கும். அந்த மக்கள் மொழியைத் தவிர்த்து வேறு நாகரிக மொழி நடையில் என்னால் படைக்க இயலாது.

"கற்பனையால் கதைகளைப் புனைவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. மனித வாழ்க்

"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

கையின் வேதனைகளையும் நோவுகளையும் பதிவு செய்யும் போது தான் ஒரு நாவல் அர்த்த செறிவு மிக்கதாக இருக்கும்" என்று 2010ல் இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்ற பெருநாட்டு எழுத்தாளரான "மாரியோ வர்காஸ் யோஸா" நாவல் இலக்கியம் பற்றி சொன்னது என் படைப்புகளுக்கும் பொருத்தமானதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

04

(முற்றும்.)

'வரலாறு எவ்வளவிற்கு சிறந்திருக்கிறதோ அவ்வளவிற்கு இலக்கியமும் சிறந்திருக்கும். வடமொழி நீங்கலாக மற்றெல்லா இலக்கியங்களும் இந்தியாவில் ஏறக்குறைய 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் தோன்றின. ஆனால் தமிழ் இலக்கியமோ கிறீஸ்துவுக்கு முன்னமே பெரும் மலர்ச்சியைக் கொண்டுள்ளது. மேலும் சங்க இலக்கியம், சமய இலக்கியம் மட்டுமன்று மக்களுடைய வாழ்க்கையைக் காட்டும் உலக இலக்கியமும் அது. தொல்காப்பியமும், எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் இந்திய இலக்கியத்தில் மட்டுமல்ல உலக இலக்கியத்திலேயே பெரும் இடத்தைப் பெற்றுள்ளன. வள்ளுவரின் திருக்குறளைப் போன்ற நூல் உலகில் இல்லை என்பது அல்பெட் சுவைட்சரின் துணிபு. நீதி இலக்கியத்தைப் போல் நமது பக்தி இலக்கியமும் சிறப்புள்ளது. நம்முடைய கலைகள், நம்முடைய கோயில்கள் சிறப்புப் பெற்றவை. மொழி அமைப்பிலும் வளத்திலும் தமிழ் மொழி உலக மொழிகளில் சிறந்தது.

தமிழின் தொன்மை, அதன் வளம், புகழ்மண்டிக் கிடக்கும் அதன் பண்பாடு பற்றியெல்லாம் ஆராய்பவர்கள் மேலும் மேலும் அவை பற்றி ஆராய விரும்புவர். ஆதலாலே தான் தமிழ் ஆராய்ச்சி வளர்ந்து கொண்டே இருக்கின்றது. - *தனிநாயகம் அடிகளார்*

# பதவியிலிருந்து நீக்கவே சனல் 4 ஊடகம் சூழ்ச்சி

## சவேந்திர சில்வா குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதி வதிவிடப் பிரதி பதவியிலிருந்து தன்னை நீக்குவதற்காகவே சனல் 4 தொலைக்காட்சியும் அமெரிக்காவில் உள்ள விடுதலைப்புலிகளின் பிரிவினரும் இணைந்து சூழ்ச்சி செய்து வருகின்றனர் என மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் 58 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த படை வீரர் பெர்னாண்டோ என்பவர் வழங்கியதாக ஒளிபரப்பிய வாக்குமூலம் உண்மையிலேயே ருவாண்டா படை வீரர் போர்க் குற்றம் தொடர்பாக வழங்கிய வாக்குமூலமேயாகும் என்று திவயின சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

புலம்பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப்புலிகள் இந்த சூழ்ச்சித் திட்டத்திற்காக பெருமளவு பணத்தை செலவிடுகின்றனர்.

இந்த சூழ்ச்சியின் ஒரு கட்டமாகவே சனல் 4 தொலைக்காட்சின் பிரதிநிதியான ஜொனாதன் மில்லரை நியூயோர்க் நகருக்கு அனுப்பி வைத்தது என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் ஜொனாதன் மில்லர் சுற்றுலாப் பயணி என்ற போர்வையில் இலங்கைக்கு விஜயம் செய்து வவுனியாவுக்குச் சென்று பொய்க்குற்றச்சாட்டுக்களை ஒன்று திரட்டியுள்ளார் என்று மேற்படி ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்றங்களின் கால எல்லை நிர்ணயம்

(கொழும்பு)

அண்மையில் தேர்தல் நடைபெற்ற 65 உள்ளூராட்சி மன்றங்களினதும் உத்தியோக பூர்வ கால எல்லை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு குறிப்பிடுகின்றது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டதாக அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலக தெரிவித்தார்.

அதன் பிரகாரம் குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ கால எல்லை 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ளதாக செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள் கடந்த 30 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

இரண்டு கட்டங்களாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 3 ஆயிரத்து 959 உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்றை இம்மாத இறுதி வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக டாக்டர் நிஹால் ஜெயதிலக தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

# ஹெட்ஜிங் உடன்படிக்கை தொடர்பான தீர்ப்பை இணக்கசபை நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் சிட்டி வங்கிக்கும் இடையிலான ஹெட்ஜிங் உடன்படிக்கை தொடர்பான தீர்ப்பை சிங்கப்பூரை தளமாக கொண்டுள்ள இணக்கசபை நிராகரித்துள்ளது.

இதன் அடிப்படையில் வங்கியினால் கோரப்பட்டுள்ள 162 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் அது மீதான வட்டித் தொகைக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐந்து அமைப்புகள் இந்த தீர்ப்பினை உறுதிப்படுத்தியுள்ளன. கடந்த மாதம் லண்டன் உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய 162 மில்லியன் அமெரிக்க டொலர்களும் அதற்கு உரிய வட்டியும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் ஸ்டேன்டர்ட் சார்டட் வங்கிக்கு வழங்க வேண்டும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# மரணதண்டனை அறிவிக்கப்பட்டதும் கர்ப்பிணியென கதறியழுத பெண்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதன் காரணமாக நீதிமன்றில் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிவானால் மரண தண்டனை அறிவிக்கப்பட்ட உடனேயே தான் கர்ப்பிணி என குறித்த பெண் நீதிவானிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு உயர் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது 142 கிராம் எடையுடைய ஹெரொயின் போதைப் பொருளை வைத்திருந்தமைக்காக 35 வயதான பிச்சைராசா குமுதினி என்ற பெண்ணுக்கு இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு மாதம்பிட்டி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

மரண தண்டனை தீர்ப்பு அறிவிக்கப்படும் போது நீதிமன்ற வழக்கத்தின்படி மின் விளக்குகள் அணைக்கப்பட்டதாகவும் அதன் போது தாம் குற்றமற்றவர் எனவும் மூன்று பிள்ளைகளின் தாய் எனவும் தற்போது தமது வயிற்றில் ஒரு குழந்தை வளர்வதாகவும் குறித்த பெண் நீதிமன்றில் கதறி அழுதுள்ளார்.

இந்த மன்றாட்டை செவிமடுத்த நீதிவான் பெண்ணின் கர்ப்ப நிலைமை குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனையடுத்து இந்த வழக்கு நாளை வியாழக்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஒரேநாளில் 203 தீர்ப்புக்களை வழங்கிய அநுராதபுர நீதிவான்

(கொழும்பு)

அநுராதபுரம் நீதிவான் ஒரே நாளில் 203 தீர்ப்புக்களை வழங்கியுள்ளார். நீண்டகாலமாக நிலுவையில் இருந்த வழக்கு விசாரணைகள் தொடர்பில் ஒரேநாளில் தீர்ப்பளித்துள்ளார். இத்தீர்ப்பினை நீதிவான் தர்ஷிக்கா விமலசிறி வழங்கியுள்ளார்.

வழக்குகளுடன் தொடர்புடைய 55 வீதமான சந்தேகநபர்களுக்கு தண்டனை விதித்ததுடன் ஏனையவர்கள் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வருடம் ஜனவரி மாதம் அநுராதபுர நீதிமன்ற வளாகத்தில் ஏற்பட்ட தீவிபத்தினால் வழக்கு விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டது.

முற்பகல் 11.15 மணி முதல் மாலை 6.30 வரையில் வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)

# இலங்கை தமிழ் இளைஞர் ஐதராபாத்தில் கைது

(டில்லி)

டில்லி பொலிஸாரால் தேடப்பட்டு வந்த தாசிந்தன் கதிர்காமு என்ற இலங்கைத் தமிழ் இளைஞர் ஐதராபாத் விமான நிலையத்தில் கைது செய்யபட்டார்.

டில்லியில் வசித்து வந்த அவரை கடவுச்சீட்டு தொடர்பாக பொலிஸார் தேடி வந்தனர். தலைமறைவாக இருந்த கதிர்காமு பற்றி நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்கள் உஷார் படுத்தப்பட்டன.

இந்த நிலையில் கடந்த 29 ஆம் திகதி ஐதராபாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு கதிர்காமு வந்தார்.

விமான நிலைய கண்காணிப்பு கமராவில் அவருடைய உருவத்தை பார்த்ததும் அங்கு பணியில் இருந்த மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் கதிர்காமுவை அடையாளம் கண்டு கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தொழிற் பாதுகாப்பு படை பொலிஸார் கதிர்காமுவை கைது செய்து டில்லி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையில் ஐதராபாத் வழியாக அமெரிக்காவுக்கு தப்பிச் செல்ல கதிர்காமு திட்டமிட்டிருந்தது தெரிய வந்தது. (ஸ்ரீ-2)

# தமிழினிக்கு விளக்கமறியல்

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிரணித் தலைவி தமிழினி தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது தமிழினியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் வழங்கப்படவுள்ளதாக இரகசிய பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன் தமிழினி தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபர் காரியாலயத்தில் இருந்து தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து தமிழினியை எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-8)

## பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு

கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய 5 தொடக்கம் 14 வயதுக்கு இடைப்பட்ட பராய மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகும் சதவீதம் அதிகரித்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையை கட்டுப்படுத்துவதற்கு பலதரப்பட்ட செயற்றிட்டங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ளதாகவும் சிறுவர் புனர்வாழ்வு மத்திய நிலையங்களின் ஊடாக சிறுபராய மாணவர்கள் குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

கண்ணீர் அஞ்சலி!



திருமதி செல்லம்மா முருகேசு அவர்கள்

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர்
திரு.மு.சுந்தரலிங்கம் அவர்களது அன்புத் தாயார்
திருமதி செல்லம்மா முருகேசு அவர்கள்
அமரத்துவமடைந்தமையையிட்டு
அன்னாரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
கரவெட்டி.

# தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி சந்தேகநபர்களை விடுதலை செய்யத்தயார்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிச் சந்தேக நபர்களை விடுதலை செய்ய அரசாங்கம் தயார் என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

தேசிய விவசாயிகள் வாரத்தை முன்னிட்டு வவுனியாநகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது தடுப்புக்காவலில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி சந்தேகநபர்களை சமூகத்திற்கு ஏற்றவாறு புனர்வாழ்வளிக்கப் பட்ட பின்னர் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மத்தியில் நிரபராதிகளும் இருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் நேரடியாக தொடர்புபட்டிருந்தவர்களும் உள்ளார்கள்.

அவர்கள் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள் என்பது தெரிந்த விடயம் தான். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்குமாறு அவர்கள் பெற்றோர்கள், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் எங்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இருந்தபோதும் அவர்களின் மனங்களை மாற்ற வேண்டியுள்ளது என பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் புதல்வர் தாய்நாட்டை இழிவுபடுத்தியுள்ளார்

## அமைச்சர் மேர்வின் தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்க தாய்நாட்டை இழிவுபடுத்தியுள்ளதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த விசாகா மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

இலங்கையர் என கூறுவதில் வெட்கமடைவதாக விமுக்தி தெரிவித்துள்ளதாகவும் அதனை சந்திரிக்காவே ஒப்புக் கொண்டுள்ளார் எனவும் ஏன் இவ்வாறு இலங்கையை இழிவுபடுத்தி பேச வேண்டும்? விமுக்தி இந்த நாட்டை இழிவுபடுத்தினாலும் நாம் இந்த நாட்டை பெருமையடையச் செய்வோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சனல் 4 காணொளியை பார்த்தன் பின்னர் சந்திரிக்காவின் புதல்வர் விமுக்தி இலங்கையர் என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கப்படுவதாக தெரிவித்தார் என அண்மையில் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமாக 4 இலட்சத்துக்கும் அதிகமான மின் விளக்குகள்


(கொழும்பு)

சட்ட விரோதமாக நான்கு இலட்சத்துக்கும் அதிகமான வீதி விளக்குகள் இலங்கையின் பல வீதிகளில் அமைக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக வருடத்திற்கு 150 ஜிகா வோட் மின்சாரம் பயன்படுத்தப்படுவதாகவும் இதன்பொருட்டு இரண்டாயிரத்து 673 மில்லியன் ரூபா செலவாகுவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப்பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளை இரவு ஏழு மணி முதல் அதிகாலை ஐந்து மணிவரை மாத்திரம் ஒளிர வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மின்சக்தி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வாறு செயற்படாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)



ஏழாலை கிழக்கு ஏழாலைச் சேர்ந்த அமரர் நா. சண்முகநாதனின் நினைவாக அவரின் குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட அறநெறி நிலைய திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் அமரர் நா. சண்முகநாதனின் திருவுருவப்படத்தை அவரின் குடும்பத்தினர் ஆலயத்திலிருந்து எடுத்து வருவதைப் படத்தில் காணலாம்.

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு வேதன நிலுவை பெற்றுக்கொடுக்க திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கான நிலுவை கொடுப்பனவுகளில் 50 சதவீதத்தை பெற்றுக் கொடுப்பதற்கான அமைச்சரவை பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக உயர்கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் சிலருக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது உயர்கல்வியமைச்சர் இவ்வாறான பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளார்.

புதிய வேதன கொடுப்பனவு முறையில் இருக்கின்ற முரண்பாடுகளை நிவர்த்திக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையை ஆராய்ந்து துரிதமாக பரிந்துரையை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வேதனம் மற்றும் கணக்கீட்டு ஆணைக்குழு தலைவருக்கு உயர் கல்வியமைச்சினால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## தரம்-5 புலமைப்பரிசில் வழிகாட்டல் செயலமர்வு

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடாத்தும் வடமராட்சி மாணவர்களிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கலையரங்கில் நடைபெறும்.

மேற்படி பரீட்சை வழிகாட்டல் செயலமர்வினை பிரபல ஆசிரியர் குழாம் நடாத்தவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இதில் அனைத்து மாணவர்களையும் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

# 2011.08 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1492- கொலம்பஸ் ஸ்பெயினை விட்டுப் புறப்பட்டார்.

★ 1492- ஸ்பெயினில் இருந்து யூதர்கள் கத்தோலிக்கர்களினால் வெளியேற்றப்பட்டனர்.

★ 1645- முப்பதாண்டுப் போர்: ஜேர்மனியில் ஆலர்ஹெம் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகள் புனித ரோமப் பேரரசுப் படைகளைத் தாக்கி வெற்றி பெற்றனர்.

★ 1678- அமெரிக்காவின் முதலாவது கப்பல் லெ கிரிஃபோன் ரொபேர்ட் லசால் என்பவரால் அமைக்கப்பட்டது.

★ 1783-ஜப்பானில் அசாமா மலை வெடித்ததில் 35 ஆயிரத்து பேர் கொல்லப்பட்டனர்.

★ 1858- இலங்கை தொடருந்து சேவையை ஆளுநர் சேர் ஹென்றி வோர்ட் ஆரம்பித்து வைத்தார்.

★ 1860-நியூசிலாந்தில் இரண்டாவது மாவோரி போர் ஆரம்பமா னது.

★ 1914- முதலாம் உலகப் போர்: ஜேர்மனி பிரான்சுடன் போர் தொடுத்தது.

★ 1916- ஐரிய தேசியவாதி சேர் ரொஜர் கேஸ்மெண்ட் ஈஸ்டர் எழுச்சியில் அவரின் பங்களிப்புகளுக்காக லண்டனில் தூக்கிலிடப்பட்டார்.

★ 1934- அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் பெரும் தலைவரானார்.

★ 1940- இரண்டாம் உலகப் போர்: இத்தாலி பிரித்தானிய சோமாலிலாந்து மீது போர் தொடுத்தது.

★ 1949- தேசிய கூடைப்பந்து சங்கம் ஐக்கிய அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.

★ 1960-நைஜர் பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1975-மொரோக்கோவில் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 188 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1976-காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★ 1990-கிழக்கிலங்கையில் காத்தான்குடியில் முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் பெண்கள் குழந்தைகள் உட்பட 103 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2005- மவுரித் தேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி மாவோயா ஊல்ட் தாயா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 2006-திருகோணமலை தோப்பூர் அல்நூராப் பாடசாலையில் தங்கியிருந்த அப்பாவிப் பொதுமக்கள் 12 பேர் எறிகணை வீச்சில் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1924-லியொன் யூரிஸ், அமெரிக்க நாவலாசிரியர் (இ.2003)

★ 1957-மணி சங்கர், இந்திய திரைப்பட இயக்குநர்

### இறப்புக்கள்

★ 1977- மக்காரியோஸ், சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதி (பி.1913)

★ 1993- சுவாமி சின்மயானந்தா, வேதாந்த தத்துவத்தைப் பரப்பிய இந்திய ஆன்மீகவாதி (பி.1916)


★ 2008- அலெக்சாண்டர் சோல்செனிட்சின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (பி.1918)

### சிறப்பு நாள்

★ நைஜர்- சுதந்திர தினம் (1960)

# நவீன எண் சோதிடம்

09



## இவர்கள், நல்ல ஞானமும் சிந்தனா சக்தியும் பெற்று படைப்பாளியாயிருப்பர்

**உடல் எண் 1 உயிர் எண் 7**

1,10,19,28 ஆகிய தேதிகளில் பிறந்து, தேதி, மாதம், வருடம் ஆகிய வற்றைக்கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமே யானால் இவர்கள் சூரியன், கேது போன்ற ஆதிக்கத்தில் பிறந்த வராவர். இவர்கள் நல்ல ஞானமும் சிந்தனா சக்தியும் பெற்று, கவிதை, கதை, எழுதும் ஆசிரியர்களா யிருப்பர். பெயர் பொருத்தமான தாக அமைந்து விட்டால் எல்லா வளமும் பெற்று வாழ்வர். அப்ப டிப் பெயர் பொருத்தமானமாக அமையாவிட்டால், பல்வேறு தோல் விகளையும் விபத்துக்களையும் சந்தித்து கடைசியில் அனுபவ சம்பாத்தியம்தான் மிஞ்சும். இவர் கள் தூக்கத்தில் க்னவு கண்டு உளறுவர். இவர்கள் முரடர்களாக இருந்தாலும் ஈவு இரக்கம் அதிக மாக உள்ளவராகவும் மத விடயங் களில் நாட்டம் கொண்டும் தெய்வ நம்பிக்கை கொண்டும் விளங் குவர்.

பார்த்தவுடனே இவர்களை நல்லவர்கள் என்றும் முன்கோபக் காரர் என்றும் சொல்லலாம். மற்றவர்களும் தன்னைப்போல் இருக்க வேண்டும் என்று எண் ணுவர். இதனால் இவர்களுக்கு நெருங்கிய நண்பர்கள் அமைவது சிரமமே. பலரைப்பழகிய இவர்கள் சிலரைக்கூட உண்மையான நண்பர் களாக வைத்துக். கொள்ள முடி யாது. இதனால் இந்த உலகத்தில் யாரைத்தான் நம்புவது என்று கூறுவர். சில நேரங்களில கலகலப் பாக பேசும் இவர்கள் திடீரென்று பேச்சைக் குறைத்துக்கொண்டு, அரங்கனர்க இருப்பர். துயரம் தாங்க முடியாத நேரங்களில் தன்னை மீறி அழுவர். சுமாரான

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

உயரமாகவும் வசீகரமான தோற்ற முடையவராகவும் இருப்பர். எளிமையான ஆடை அணிந்த போதிலும் தூய்மையாகக் காட்சி யளிப்பர். புகழ்ச்சிக்கு மயங்காத இவர்களை, மற்றவர்கள் புகழ்ந்து பேசினால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனக்குள்ளே தீர்மானித்துக் கொள்வர். உண் மையை விரும்புவதாலும் போலி களை வெறுப்பதாலும் மற்றவர் களிடம் அபிப்பிராய பேதம் உண்டாக்கிக் கொண்டே இருக்கும் இந்த எண்ணிக்கைக்காரர்களில் பலர் அரசாங்க உத்தியோகத்தில் இருந்தாலும் நேர்மையுடன் இருப்பர்.

இதனால் பலர் இவர்களுக்கு வேதாந்தி எனப் பெயர் சூட்டுவார். தனது மதத்தில் இவர்களுக்கு அள வற்ற நம்பிக்கை இருப்பதால் மதக் கோட்பாடுகள் அனைத்தும் வாழ்க் கையின் வழிகாட்டி என்று பின்பற்று வர். மகிழ்ச்சியான நேரங்களில் சகஜ மாகப்பழகும் இவர்கள் தனிமையில் இருக்கும் போது ஏகாந்த வாழ்க்கை யைப் பற்றிச் சிந்திப்பர். குடும்ப வாழ்க்கை சிறப்பாக இல்லை என்று சிலர் வருந்துவர். பெயர் பொருத்த மானதாக அமைந்திருந்தால் இக் குறைவராது. ஆனால், இவர்களுக்கு 9 எண் வருகின்ற வாழ்க்கைத் துணைவர் அமைந்துவிட்டால் குடும்ப வாழ்க்கை கசப்பாகிவிடும்.

இவர்களுக்குப்பொருத்தமான தேதியில் மனைவி அமைந்து விட் டால் குடும்பவாழ்க்கை மகிழ்ச் சியாக இருக்கும். ஆனால், சிலர், சந்தோஷமான குடும்ப வாழ்க்கை அமையாமல் வேதனைப்பட்டு சதா உலகத்திற்கு அப்பாற்பட்டு சிந் திப்பதை சில நண்பர்கள் மூலம் அறிய முடிகிறது. பொருத்தமான பெயர் அமையாவிட்டால் இவர் களுக்கு மன வேதனையும் அடிக்கடி சோர்வும் பைத்தியம் போன்ற நிலையும் இருக்கும். ஆனால், இதை யாரிடமும் வெளியில் கூறாது மறைத்து விடுவர்.

பெயர் பொருத்தமாக அமைந்த இந்த எண்ணிக்கைக்காரர்கள், பெரும் பதவியில் இருப்பவராகவும் ஆராய்ச்சியாளராகவும் தொழில் அதிபராகவும் அரசியல் வாதியாகவும் இருக்கின்றனர். பொருத்தமான தேதி எண்களில் திருமணம் செய்து கொள்பவர்கள் சந்தோஷமான வாழ்க்கையை அடைகின்றனர். பெயர்ப் பொருத்தமும் வாழ்க்கைப் பொருத்தமும் அமையாதவர்கள் உடல் நோயாலும் மன நோயாலும் துன்பப் படுகிறார்கள். இதனால் கீழே குறிப் பிட்டபடி பெயரை நன்றாக மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக்காரர்கள் நெருப்பு, உலோகம், வாகனம், கல், கமிஷன் சம்பந்தமான தொழிலால் மேன்மையடைவர். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமையாவிட் டால், இவருடைய உழைப்பு பிற ருக்குப் பயன்பட்டுவிடும். கீழே குறிப்பிட்டபடி மாற்றி அமைத்துக் கொள்ளவும்..

**நோய்**

இவர்களுக்கு மனோவியாதி வரலாம். தேவையற்ற குழப்பம், காரணமற்ற கவலை, திடீரென்று விபத்துக்கள், நீர் சம்பந்தப்பட்ட வியாதி போன்றவைகள் வரும். தனது பெயரைப்பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் நோய் குறையலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கையில் பிறந் தவர்களுக்கு திறமையும் நல்ல நிர்வாக சக்தியும் இருந்த போதி லும், பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் துன்பப்படுவர். இதனால் சூரிய ஆதிக்கமான 19,37,46,64, போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொண்டும் சுக்கிர ஆதிக்கமான 15,24,33,42 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக்கொண்டும் சிறப்படை யலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 1,2,6

யோகமான தேதிகள்- 1,10, 19,28; 2,11,20,29; 6,15,24

யோகமான நிறம்- மஞ்சள் வெளிர் நீலம், வெளிர் பச்சை

யோகமான மோதிரக்கல்- கனக புஷ்பராகம், தங்க புஷப ராகம், வைடூரியம், முத்து.

ஆகாத நிறம்- கறுப்பு, சிவப்பு

ஆகாத தேதிகள்- 9,18,27; 8,17,26

* * *


## பெயர் எண்களின் பலன்

**28 எண் பலன்**

இந்த எண் பெயராகவோ, அல்லது வியாபார விலாசமாகவோ வருமேயானால், சோகமே காட்சி யாகத் தெரியும். எங்கு சென்றாலும் கஷ்டங்களையும் போட்டிகளையும் சந்திக்க நேரும். சிறிய முன்னேற்றம் அடைந்தால், அடுத்து இழக்க நேரும். இளமையில் சுகமாக இருந்த இவர்கள், வயது ஏறஏற பேரிழப் பையும் குழப்பத்தையும் சந்திக்க நேரும். எங்கு சென்றாலும் பொல் லாப்பும், கெட்ட பெயரும் ஏற்படும். தன்னுடைய முயற்சிகள் தோல்வி யாக முடிவதால் வாழ்க்கையை வெறுக்க நேரிடும். இவர்களுடைய சொத்துக்கள் திடீரென்று பறிமுத லாகும். இதனால் 1 எண்களில் 28 எண் மிகவும் மோசமானதாக இருப்பதால் பெயரை வேறு ஒன்று என்ற எண்ணில் மாற்றிக்கொள்ள லாம்.

**29 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் வம்புக்காரர்களாக மாறிவிடுவர் அடுத்தவர் செய்யும் செயல்கள் இவர்களுக்குத் தவறா கவே தென்படும். பிறரை நம்புவதே இல்லை. இவர்களுடைய குடும்ப வாழ்க்கை ஒரு குழப்பம் மிகுந்த வாழ்க்கையாகத்தான் இருக்கும். எல்லா மனிதர்களும் ஏமாற்றுக் காரர்கள் என்று கூறுவர். பிறரைக் கடுமையாக எதிர்ப்பர். எதிரி பலமாகிவிட்டால் நயந்து செல்வர். இப்படிப்பட்ட இவர்களுக்கு பிறரால் துன்பங்களும் நேரி டுகிறது. இதனால் இந்த எண் விரும்பத்தக்கது அல்ல. ஆனால், 7,16,25 தேதி களில் பிறந்த வர்களுக்கு மட் டுமே மேற்குறி ப்பிட்ட கெட்ட பலன்கள் குறைய வாய்ப்பு உண்டு. 9,18,27 போன்ற தேதி யில் பிறந்தவர் கள் இந்த எண் வருகின்ற மாதிரி பெயர் வைத்திருந்தால் பெண்களால் ஏற்பட்ட குழப்பத்தினால் தற் கொலை செய்ய முயல்வர்.



**30 எண் பலன்**


இந்த எண் பெயராகவோ, வியாபார விலாசமாகவோ வந் தால், வருமானம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பல்வேறு நல்ல சந்தர்ப்பங்களை, அதாவது வருமானம் வரக்கூடிய சூழ்நிலை இருந்தும், பயன்படுத்தாது விட்டு விடுவர். பிறருக்காக உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்கள் தன்மனத் திருப்திக்காக பிறர் செய்ய முடியாத காரியங் களைச் செய்வர். மற்றவர்களை எளிதில் புரிந்து கொள்ளும் திறமை இவர்களிடம் வந்து விடும். இதனால் இந்த எண் சுமாரான நன்மையளிப்பவையே!

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

(தொடரும்)

# வடக்கு மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வினை வழங்க வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

வடபகுதி மக்களின்அபிலாஷைகளை புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று சுய நிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வினை அரசாங்கம் வழங்கவேண்டும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அரசியல் கட்சிகள் எதிர்த்தாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இதனை வழங்க முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சென்னையில் இடம்பெற்ற இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் இலங்கையில் வடபகுதி மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் நிலைப்பாட்டை கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதி மக்களுக்கு தம்மைத் தாமே ஆளும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென்பது எமது நிலைப்பாடாகும்.

இது தொடர்பில் அம்மக்களின் விருப்பத்தை அறிந்து கொண்டு அதற்கமைய இதனை வழங்க வேண்டும்.

அத்தோடு தற்போதைய சூழ்நிலையில் 13ஆவது திருத்ததிற்கமைவாக தீர்வு பொருந்தாது.

இத்திருத்தத்திலுள்ள மத் திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திருத்தத்தை ஒதுக்கி வைத்துவிட்டு பேச்சுவார்த்தைகளை நடத்தி அதிகாரப் பகிர்வுடனான தீர்வுகளை வழங்க வேண்டும்.அத்தோடு பொலிஸ் அதிகாரங்க ளையும் வழங்கலாம்.

எவ்வாறெனில் இவ் அதிகாரங்களிலுள்ள முக்கியமானவற்றை அதாவது தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்களை மத்திய அரசாங்கம் வைத்துக்கொண்டு சிறு குற்றங்களை விசாரிக்கும் பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்க முடியும்.

இந்த நாட்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளே அதிகம் உள்ளது.

எனவே காணி அதிகாரங்களை மத்திய அரசாங்கமும் மாகாண சபைகளும் இணைந்த குழுவை அமைத்து வழங்க முடியும். அதனை நாம் ஆதரிக்கின்றோம்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில பேரினவாதக் கொள்கைகள் கொண்ட அரசியல் கட்சிகள் எதிர்த்தாலும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இதனை வழங்க முடியும்.

18 ஆவது திருத்தம் ஜனநாயகத்திற்கு விரோதமானது. இதற்கு எதிராக பாராளுமன்றத்தில் நான் உரையாற்றினேன்.

ஆனால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியென்ற காரணத்தினால் ஆதரவாக வாக்களிக்கும் தார்மீக கடமை உருவானது.

வடக்கு- கிழக்கு இணைப்பு என்பது ஜனநாயக ரீதியாக தீர்க்கப்படவேண்டிய விடயமாகும். இவ் இணைப்புத் தொடர்பாக கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தை அறிய வேண்டும்.

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிறைவேற்றியுள்ள தீர்மானமானது ஜனநாயக ரீதியில் தீர்க்கப்படவேண்டிய விடயமாகும் என்றார்.

(ஸ்ரீ-2)

## ஏகாதிபத்தியவாதிகளுக்கு உந்துசக்தியை வழங்கி வருகின்றார் சந்திரிக்கா

### அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

ஏகாதிபத்தியவாதிகள் இலங்கைக்கு எதிராக் செயற்பட்டு வரும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அதற்கு உந்து சக்தியை கொடுப்பது கவலைக்குரியது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் பதவியேற்று கொள்ளும் வைபவம் நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் உள்ள சீ.எச்.பீ.பி. மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக் காட்சி ஊடாக இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் உண்மையான நிலைமை என்ன? அவர்கள் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்தியவாதிகள் பாலூட்டி வளர்த்த பயங்கரவாத அமைப்பு ஒன்றை தோற்கடித்த முதல் நாடு இலங்கை.

இலங்கை உலகத்திற்கு சிறந்த பாடத்தை கற்றுக் கொடுத்துள்ளது. இதனால் ஏகாதிபத்தியவாதிகள் கவலையடைந்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த ஏகாதிபத்தியவாதிகள் இலங்கை பெற்ற வெற்றியை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள உலகம் முழுவதும் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் நாட்டை ஆட்சி செய்த பொறுப்பு வாய்ந்த நபர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் செயற்பாடுகள் பொருத்தமற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## மஹோற்சவம்

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு உலாவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ-2-70)

## சனல் 4 ஊடகத்திடம் இழப்பீடு கோரி பிரிட்டனில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)


இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் போலி காணொளியை ஒளிபரப்பியமை சம்பந்தமாக சனல் 4 தொலைக்காட்சியிடம் ஒரு திரில்லியன் பவுண்கள் இழப்பீடு கோரி பிரித்தானியாவின் வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் வசிக்கும் சிங்களவர்களைக் கொண்ட பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கையர் ஒன்றியம் அமைப்பு இந்த வழக்கை தாக்கல் செய்ய உள்ளது. இதற்குத் தேவையான சகல பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் அனுரமெதகெதர தெரிவித்துள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சி இலங்கை தொடர்பாக வெளியிட்ட காணொளி காட்சிகளுக்குப் பின்னர் இந்த அமைப்பினர் அந்தத் தொலைக்காட்சிக்கு எதிரான அதன் அலுவலகத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியதுடன் பிரித்தானிய பிரதமரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (ஸ்ரீ-4)


ஸ்ரீ மத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின்

26 ஆவது குரு பூசை தின நிகழ்வு



காலம் : 05.08.2011(வெள்ளிக்கிழமை)

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்

விசேட நிகழ்வு : சிறப்பு இசைச் சொற்பொழிவு

"மனிதருள் புனிதர்" (பக்கவாத்திய சகிதம்)

வழங்குபவர் : திரு. க.ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கள்

(இளை.அதிபர்)

வெள்ளிவாராந்த நிகழ்வின் வரிசையில்-யாழ்.தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர்களின் :- கலைநிகழ்வு வழமைபோல் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் குரு பூசை நிகழ்வுகள் இடம் பெறும்

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச் சந்நிதி,
தொண்டைமானாறு.

சந்நிதியான் ஆச்சிரமம்

(சி-3905)

03. மண்ணைப் பரிசோதிக்கும்போது கையில் அணிய வேண்டியது,
1) மணிக்கூடு 2) கையுறை
3) பொலித்தீன் 4) எதுவுமில்லை

04. **SLDA** எனும் குறியீடு காணப்படுவது,
1) பால்மா 2) பற்றறி 3) பற்பசை 4) மின்குமிழ்

05. தரமான தேயிலையை தண்ணீரில் இட்டால் ஏற்படும் நிறம் யாது?
1) கபிலம் 2) கறுப்பு 3) இளமஞ்சள் 4) சிவப்பு

06. எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவை எது?
1) போக்குவரத்து 2) தொலைபேசி
3) மருத்துவம் 4) மின்சாரம்

07. ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை என்பதன் சுருக்கம்,
1) ஆ.கூ.சி.வி 2) கா.வ.தி 3) ஆ.கு.சி.வி 4) உ.செ.தி

08. "தோடம்பழம் போலவே பூமி" எனும் பாடலைப் பாடியவர் யார்?
1) கவிஞர் வாகரை வாணன் 2) சி. அகிலேச சர்மா
2) நல்லை அமிழ்தன் 4) ச. அருணாசலம்

09. உள் மூச்சு வாங்கி மூச்சை வெளிவிடும் செயற்பாடானது எது?
1) உடலைத் தளர்த்துதல் 2) மனவுறுதி
3) பிரார்த்தனை 4) மலர்வு

10. எலியின் உடலில் வாழும் தெள்ளு காரணமாக ஏற்படும் நோய்,
1) கொள்ளை நோய் 2) சிக்குன் குன்யா
3) டெங்கு 4) கழிச்சல்

11) பனிக்கட்டியொன்றை நீரில் இட்டால் நடைபெறுவது,
1) நீரில் மிதக்கும் 2) நீரில் தாளும்
3) நீரில் மிதந்து நீர் குளிர்ச்சியடையும் 4) நீர் வெப்பமடையும்

12) இலங்கையின் தேசிய இலச்சினையிலுள்ள நிறைகலசம் குறிப்பது
1) தன்னிறைவு 2) சௌபாக்கியம்
3) தார்மீகம் 4) நிலைத்திருப்பு

13) அலங்காரத் தையலில் ஒன்று.
1) சிறுநூலோடி 2) பெருநூலோடி
3) சங்கிலித்தையல் 4) சோம்தையல்

14) தாவரங்களின் தளிர்களை உண்ணுவது.
1) நத்தை 2) அணில் 3) கறையான் 4) தேனீ

15) நரம்புக் கருவிகளில் ஒன்று,
1) மிருதங்கம் 2) தபேலா 3) வயலின் 4) கைத்தாளம்

15. கணித்து எழுதுக.

01. கல்கியின் வயது 12 வருடங்கள், அவரது தாயின் வயது கல்கியின் வயதின் 4 மடங்கு ஆகும். தாயின் வயதிற்கும், மகளின் வயதிற்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?
(................................)


02. ஒரு தையற்காரன் 738 மீற்றர் துணி வைத்துள்ளான். ஒரு துண்டுத்துணி 3m ஆக எத்தனை துண்டுகள் வெட்டலாம்?
(................................)

03. நிமலன் 624 முத்திரை சேர்த்துள்ளான். அவன் முத்திரைக் கொப்பியில் ஒரு பக்கத்தில் 6 முத்திரை ஒட்டினால் எல்லா முத்திரையும் ஒட்ட எத்தனை பக்கம் தேவை?
(................................)

04. ஒரே அளவான 300 குவளைகளை ஒரு பெட்டியில் அடுக்கலாம். 1375 குவளைகளை 5 ஒரே அளவு பெட்டியில் வைக்க இன்னும் எத்தனை குவளைகள் தேவை? (................................)

05. பெட்டியொன்றில் 10 எள்ளுருண்டைப் பைக்கற்றுக்களை அடுக்கலாம். 115 பைக்கற்றுக்களை அடுக்குவதற்குத் தேவையான பெட்டிகளின் எண்ணிக்கை யாது? (................................)

06. பின்வரும் உரு மூலம் அட்டவணையை நிரப்புங்கள்.



| செங்கோணங்களின் எண்ணிக்கை | செங்கோணத்திலும் கூடிய கோணங்களின் எண்ணிக்கை | செங்கோணத்திலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | | |

07. 9l தேங்காய் எண்ணெயை 250ml கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் அடைக்கலாம்?
(................................)

08. ஒருவன் மு.ப 7.30 மணிக்கு புறப்பட்டு பி.ப 3.00 மணிக்கு திரும்ப வந்தால் அவன் வெளியில் செலவிட்ட நேரம் யாது?
(................................)

09. 3, 6, 10, [ ], 21, 28 வெற்றுக்கூண்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக?


10. 2kg பருப்பின் விலை ரூபா 180.00 எனின்., 250g பருப்பின் விலை யாது?
(......... ரூபா ..........சதம்)

11. ஒரு வியாபாரி 10 தேங்காய்கள் வாங்குபவருக்கு 2 தேங்காய்கள் இலவசமாகக் கொடுக்கிறார். ஒருவர் 80 தேங்காய் வாங்கினால் அவர் வீட்டுக்குக் கொண்டு செல்லும் தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(................................)

12. பண்ணையொன்றில் 1065 ஆடுகளும், 2004 கோழிகளும், 376 பசுக்களும் உள்ளன. அங்குள்ள பிராணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
(................................)

13. ஒரு பைக்கற்றில் 5 மருந்து வில்லைகள் வீதம் 550 மருந்து வில்லைகளை எத்தனை பைக்கற்றுக்களில் அடைக்கலாம்?
(................................)

14. கடையொன்றில் ஒரு கூடையில் 150 முட்டைகள் உள்ளன., மற்றைய கூடையில் முதல் கூடையிலுள்ள முட்டைகளில் 3 மடங்கு முட்டைகள் உள்ளன. எனின் கடையிலுள்ள முட்டைகளின் எண்ணிக்கை யாது?
(................................)

15.  நிழற்றப்பட்ட பகுதி முழு உருவில் என்ன பின்னம்?
(................................)

16. கழிக்குக. 4.0 - 1.4 = ..........................

17. பிரிக்குக 603 ÷ 9 = ..........................

♦ வெற்றிடத்தை நிரப்புக.

18.
```
  5 0 1
  3 7 4
- [ ][ ][ ]
```

19. 31 × 24 = [ ][ ][ ]

16. கீழே ஒரு கதைக்குரிய படங்கள் தரப்பட்டுள்ளன. படத்திலுள்ள சம்பவங்களைக் கொண்டு ஆறு வாக்கியங்கள் எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.)



01. ..........................................................
..........................................................

02. ..........................................................
..........................................................

03. ..........................................................
..........................................................

04. ..........................................................
..........................................................

05. ..........................................................
..........................................................

06. ..........................................................
..........................................................

# வீடு, வாகன யோகம் தரும் சந்திர எண் சக்கரம்

ஜோதிடக்களம்

ஒருவரது ஜாதகத்தில் சந்திரன் நல்ல விதமாக அமைந்து இருந்தால் அவருக்கு தாய் மற்றும் தாய் வழியில் நன்மைகள் ஏற்படும்.


சந்திரன் மனஸ்காரகன் என்பதனால் ஒருவருக்கு வாழ்க்கையில் திருப்தி ஏற்பட சந்திர பலம் தேவை. வியாபாரத்தில் வெற்றி கிடைக்க, ஆடை, ஆபரணங்கள் சேர்தல், நோயற்ற வாழ்க்கை அமைவது, வீடு, வாகனம், தோட்டம் போன்றவை அமைதல் போன்றவற்றுக்கும் ஒருவரது ஜாதகத்தில் சந்திரன் உச்சம் பெற்றிருப்பது அவசியம் ஆகும்.

மேலும் சந்திர திசை காலத்தில் தான் ஒருவருக்கு அவர் வகிக்கும் துறையில் புகழும் உயர்வும் கிடைக்கும்.இது தவிர தென்னை, வாழை, போன்ற பயிர்களால் அதிக வருமானமும் கடல் கடந்த வியாபாரம், லாட்டரி, பங்கு வர்த்தகம், கொன்றாக் போன்றவற்றில் ஒருவர் இலாபம் பெற வேண்டுமானால் அவருக்கு சந்திரன் உச்சம் பெற்று இருக்க வேண்டும்.

ஒருவரது ஜாதகத்தில் சந்திரன் கெட்டுப்போய் இருந்தால் தாயாருக்குப் பாதிப்புகள் ஏற்படுதல், பெண்களுக்கு உடல் நலக்குறைவு, பொருள் விரயம், தண்ணீரால் அபாயம், வியாபார நஷ்டம், பிறரால் ஏமாற்றப்படுதல், போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். இதில் மற்ற கிரகங்களுக்கும் சம்பந்தம் இருக்கும் என்றாலும் சந்திரன் மட்டுமே அந்தந்த கிரகங்களின் பலனையும் சேர்த்துக் கொடுக்க கூடியதாக சந்திர திசை உள்ளது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | 47 | 16 | 41 | 10 | 35 | 4 |
| 5 | 23 | 48 | 17 | 42 | 11 | 29 |
| 30 | 6 | 24 | 49 | 18 | 36 | 12 |
| 13 | 31 | 7 | 25 | 43 | 19 | 37 |
| 38 | 14 | 32 | 1 | 26 | 44 | 20 |
| 21 | 39 | 8 | 33 | 2 | 27 | 45 |
| 46 | 15 | 40 | 9 | 34 | 3 | 28 |

இது போன்ற நிலை யில் சந்திரனின் பலனை அதிகப்படுத்தவும் சந்திரனால் ஏற்படும் கெடுபலன்களின் தீவிரத்தை குறைக்கவும் உதவும் எண் சக்கரம் தான் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. சந்திரனுக்கு உரிய எண் ஏழு என்பதால் 7 கட்டங்கள் வருமாறு குறுக்காக எட்டு கோடும் நெடுக்காக எட்டு கோடும் வரைந்து சக்கரம் அமைக்க வேண்டும். அதில் ஒன்று முதல் 49 வரையுள்ள எண்களை சக்கரத்தில் உள்ள படி எழுத வேண்டும். இந்த கட்டத்தில் உள்ள எண்களை எப்படிக் கூட்டினாலும் மொத்தம் 175 வரும். (175 இன் கூட்டுத் தொகை 13(1+7+5 =13) 13 இன் கூட்டுத்தொகை 4 (1+3=4). இந்த 4 என்பது சூரியனுக்கு உரிய எண் ஆகும்.



சந்திரனுக்குரிய இந்த எண் எந்திரத்தை வெள்ளித்தகட்டில் எழுதுவதே சிறப்பு. இந்த சந்திர எண் எந்திரத்தை பூஜை அறையில் வைத்து சந்திரனுக்கு உரிய சுலோகங்களைச் சொல்லி பூஜை செய்து வரலாம். இவ்வாறு செய்து வந்தால் அவருக்கு சந்திரன் ஜாதகத்தில் நல்ல நிலையில் அமைந்து இருந்தால் விசேடமான பலன்கள் கிடைக்கும். சந்திரன் தீய பலன்கள் தருபவராக இருந்தால் அதனால் வரும் கெடுபலன்களின் வேகம் குறையும்.

**சந்திர காயத்ரீ:**

பத்ம த்வஜாய வித்மஹே ஹேம ரூபய தீமஹி

தன்னோ ஸோம: பிரசோதயாத்.

**தியான சுலோகம்:**

உடல் ஆரோக்கியம், பணவரவு ஆகியவற்றுக்கு சந்திரனைக் குறித்து தியானம் செய்வது நல்லது. அப்போது சொல்ல வேண்டிய சுலோகம்.

கதாதர தரம் தேவம் ஸ்வேத வர்ண நிசாகரம் தியாயே தம்ருத சம்பூஷம் சர்வகாம பலப்ரதம்.

சந்திரன் தீய பலன்கள் தரும் நிலையில் உள்ள ஜாதகங்கள் துர்க்கா பூஜை செய்து சந்திர ஜெபம் செய்து வருவது நல்லது. இவர்கள் **ஓம் ஸ்ராம் ஹ்ரீம் ஸ்ரெளம் ச: சந்திரமஸே நம** என்ற மந்திர த்தை 10 ஆயிரம் முறை ஜெபிக்க வேண்டும். பின்னர் வெள்ளி, அரிசி, வஸ்திரம் ஆகியவற்றை தானம் செய்ய கொடுக்க வேண்டும். இந்த மந்திர ஜெபம் மற்றும் தானம் ஆகியவற்றை மலையில் உள்ள கோவில்களில் அமர்ந்து செய்வது சிறப்பு.

# 3 பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு நேற்று முதல் இடமாற்ற உத்தரவு

(கொழும்பு)

மூன்று பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணத்திற்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர வடமேல் மாகாணத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயக்கொடி குறிப்பிட்டார்.

இதேவேளை சப்ரகமுவ மாகாணத்திற்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் என்.கே.சங்கர் ஊவா மாகாணத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அதன்படி அவர் வட மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக செயற்படவுள்ளனர். (ஸ்ரீ-2)

# ரணிலை பதவிவிலகக் கோரி பிக்குகள் உண்ணாவிரதம்?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பதவிவிலகுமாறு வலியுறுத்தும் நோக்கில் பௌத்த பிக்குகள் சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்களினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதாக எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள சிறிகொத்தவிற்கு எதிரில் பௌத்த பிக்குகள் சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. தலைமைப் பதவியை கருஜயசூரியவிடம் ஒப்படைக்குமாறு சஜித் தரப்பினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டின் பின்னர் நடைபெற்ற சகல தேர்தல்களிலும் கட்சி தோல்வியைத் தழுவியுள்ளதாகவும் இதற்கு கட்சித் தலைவரே பொறுப்பு எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஸ்ரீ-2)

# யாழ்ப்பாண தேர்தல்....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்களது கிராமங்களில் தங்களது வாக்குரிமையை வைத்திருக்க வேண்டும். கொழும்பில் பல அரசியல் பிரமுகர்கள் வாழ்ந்தாலும் இவர்களில் பெரும்பான்மையினர் தங்களது பூர்வீகக் கிராமங்களிலேயே தங்களது வாக்குரிமையை வைத்துள்ளனர் என்பது அறியக்கிடக்கின்றது. கொழும்பிலும் பிறபகுதிகளிலும் வாழும் யாழ்ப்பாணத் தமிழர்கள் தாங்கள் வாழும் இடங்களில் குறிப்பிடகத்தவர்கள் தங்களை வாக்காளர்களாக பதியவும் இல்லை. பதியப்படவும் இல்லை. வாக்குரிமை உள்ளவர்கள் கூட தேர்தல் வாக்களிப்பில் பெரிதும் ஈடுபாடு காட்டுவதில்லை. மேலும் தமிழ் பிரதி நிதிகளும் தெரிவுசெய்யப்படுவதில்லை. இதனால் வெளி மாவட்டத்தில் வாழும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மகளது வாக்காளர் பதிவுகள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இருந்தால் இம்மாவட்டத்திற்குரிய அங்கத்தவர் எண்ணிக்கை குறையாமல் இருக்க அல்லது கூடுதலாகப் பெற உதவியாக அமையும். இது பல வழிகளில் பயனுடையதாக இருக்கும்.

4. தொழிலுக்காகவும் மற்றும் பல காரணங்களுக்காகவும் புலம் பெயர்ந்து பிற நாடுகளில் குடியுரிமை பெறாதவர்கள், அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் மூலம் தங்களது வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிக்க முடியும். பிற நாட்டில் குடிய்ரிமை பெறும் வரைக்கும் அவர் இந்நாட்டுப் குடிமகன் என்பது கவனிக்கத்தக்கது.

5.வெளிநாடுகளில் வாழும் யாழ்பபாணத்தைச் சேர்ந்தவர்கள் இரட்டை பிரஜாவுரிமை பெற. ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் இவர்கள் வாக்காளராக வருவதால் மாவட்ட வாக்காளரகளின் எண்ணிக்கையை சிறிதளவாவது அதிகரிக்க முடியும்.

வெளிநாடுகளில் வாழும் யாழ்ப்பாண தற்பொழுது இருக்கும் தேர்தல்முறை மிகவும் நுணுக்கமானதாகவும் அறிவுசார் செயற்பாடு வேண்டி நிற்பதால் இது பற்றிய நுண்ணிய அறிவு தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் தொண்டர்களுக்கும் தேவையாகும். ஏனெனில் சரியான முறையில் வாக்காளர் பட்டியல் உச்சமான பதிவு பெறும் பொழுது ஒரு வாக்காளரால் அல்லது ஒருசில வாக்காளர்களால்கூட மேலதிகமாக ஒரு அங்கத்தவரை பெற முடியும் அல்லது இழக்கவும் முடியும். இதனால் ஒவ்வொரு வாக்காளர் பதிவு பயனைத்தரவல்லது.

1947–1960 இற்கும் இடையில் தெரிவு செய்யப்பட்ட 95 அங்கத்தவர்களில் இம்மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் (7) 7.4%ஆக இருந்தது. 1960-1977இற்கும் இடையில் தெரிவு செய்யப்பட்ட 151 அங்கத்தவர்களில் இம்மாவட்டத்தின் பங்களிப்பு (11) 7.3%ஆக இருந்தது. 1977–1989இற்கும் இடையில் தெரிவு செய்யப்பட்ட 168 அங்கத்தவர்களில் இம்மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் (11) 6.5%ஆக குறைந்தது. 1989இல் 225 பாராளுமன்ற அங்கத்தவர்களில் இம்மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் (11) 4.9%ஆக குறைந்து, பின்னர் (10) 4.4%ஆக குறைந்து அதன் பின்னர் (9) 4.4%ஆக குறைந்துள்ளது. மேலும் 2010 இல் (6) 2.7% ஆக குறைந்துள்ளது என அறியக்கிடக்கின்றது. எனவே இப்போக்கு இம்மாவட்டத்திற்கு நன்மை தராதபடியால் அங்கத்தவர் எண்ணிக்கை குறைவடையாதிருப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ் அரசியல் தலைவர்களும் சமுகத் தலைவர்களும் துரிதமாக செயற்பட வேண்டும். இதனைக் குறைப்பதற்கான மேற் கூறிய வழிவகைகளை கடைப்பிடித்து வாக்காளர் எண்ணிக்கை குறைவடைவதை தவிர்க்க வேண்டும்.

மேலும் இருக்கும் பிரதிநிதித்துவம் குறை வடையாமல் இருப்பதற்கு மாற்று வழிவகைகளை முன்னெடுக்க வேணடும். (முற்றும்)

# சிறப்பு பொருளாதார கடல் வலயத்தை பகிர்வது தொடர்பில் இந்தியா கடும்போக்கு

## இலங்கைக்கு சிக்கல் நிலை

(கொழும்பு)

இலங்கையின் சிறப்பு பொருளாதார கடல் வலயத்தை பகிர்ந்து கொள்வதன் மூலம் இந்திய- இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று இந்தியா முன்வைத்த யோசனை இராஜதந்திர நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்வைத்த இந்த யோசனைக்கு இலங்கை எதிர்ப்பு தெரிவித்தது. ஆனால் இந்த விடயத்தில் இந்தியா கடும் போக்குடன் இருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவின் விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் வரைவில் கொழும்பு வந்து இந்த விவகாரம் குறித்தும் இலங்கையுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

கடந்தவாரம் ஐ.நா.வின் உணவு விவசாய நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற சரத் பவார் கொழும்பு வரத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் இந்தியப் பிரதமரின் அவசர பேரில் சரத் பாவர் புதுடில்லி சென்றதால் அவரது பயணம் கைவிடப்பட்டது.

இந்நநிலையில் விரைவில் கொழும்பு வரும் சரத்பவார் இலங்கையின் சிறப்பு பொருளாதார கடல் வலயத்தை பகிர்ந்து கொள்வது தொடர்பாக அழுத்தம் கொடுக்கலாம் என்று கருதப்படுகிறது. (ஸ்ரீ-4)

# விளையாட்டு போட்டி

மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் இரா. வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயதர்மகர்த்தா சபை செயலாளர் ந.விவேகானந்தராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதில் சிறப்பு விருந்தினராக வலிகாமம் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.குகனேசன், மானிப்பாய் இந்துக்கல்லூரி உப அதிபர் த.ரமேஸ் மற்றும் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை அதிபர் திருமதி ச. சிவகுமார் ஆகியோரும் கௌரவ விருந் தினராக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சுபாஜினியும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-26)

# சீமெந்து தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

சந்தையில் நிலவும் சீமெந்து தட்டுப்பாட்டை அடுத்த வாரத்திற்குள் முற்றாக நீக்க முடியும் என கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு சீமெந்தை விநியோகிக்கும் பாகிஸ்தான் பிரபல நிறுவனம் மூடப்பட்டமையே இதற்கு காரணம் என வர்த்தக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமையை சமாளிக்கும் வகையில் உடனடியாக சீமெந்தை இறக்குமதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு சீமெந்து விற்பனை செய்வோருக்கு களஞ்சியசாலைகளில் சீமெந்தை பதுக்கி வைத்துள்ளவர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் சேவைகள் அதிகாரசபை விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஒரு மூடை சீமெந்தின் நிர்ணய விலை 750 ரூபாவாகும்.

சீமெந்து மூடைகள் மூன்று தொடக்கம் ஐந்து மாதங்கள் வரை மாத்திரமே களஞ்சியப்படுத்தி வைக்க முடியும் என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கு மேற்பட்ட காலத்திற்கு சீமெந்து மூடைகள் களஞ்சியங்களில் வைக்கப்படுமாயின் அது நுகர்வோர் சட்டத்தை மீறும் செயலாகும் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# யுத்தக் குற்றவாளியான இலங்கையின் குத்துச்சண்டை வீரர் அமெரிக்காவில் கைது

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் அதிகார சபையினால் தேடப்பட்டு யுத்தக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்த இலங்கை குத்துச் சண்டை வீரரான இளந்தரி தேவஹேகுலதுங்க அமெரிக்க மியாமி சிறைச்சாலையில் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தேடப்பட்டு வந்த இவர் கனடாவில் இல்லை என்பதால் கனேடிய எல்லைப் பாதுகாப்பு சேவை முகவர் அமைப்பு அமெரிக்காவினுள் யுத்தக்குற்றவாளிகள் ஊடுருவியிருக்கலாம் என அமெரிக்காவுக்கு அறிவுறுத்தியதனை அடுத்து இளந்தரிதேவஹே குலதுங்க என்பவர் ஏற்கனவே தைது செய்யப்பட்டுள்ளார் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அவரை இலங்கைக்கு திருப்பி அனுப்பவோ அல்லது அவரை கனடாவிடம் ஒப்படைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு விக்டோரியா பகுதியில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற இளந்தரிதேவஹே குலதுங்க முதற்போட்டியிலேயே தோல்வியுற்றதனை அடுத்து தெதடர்ந்து போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பினை இழந்துள்ளார்.

இதனை அடுத்து கனடாவிலேயே தலைமறைவாகி வாழ்ந்து வந்துள்ளார். (ஸ்ரீ-2)

# வவு.ஆடைத் தொழிற்சாலை நிர்மாண பணிகள் 11 மாதங்களுக்குள் பூர்த்தி

வவுனியாவில் முதல் முறையாக அமைக்கப்படும் ஆடைத் தொழிற்சாலைக்கான நிர்மாணப்பணிகள் அடுத்த 11 மாதங்களுக்குள் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான நடவடிக்கைகளை இத்தாலியின் ஆடைத்தொழிற்சாலை நிறுவனமொன்று ஆரம்பித்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலைக்கான அடிக்கல் அண்மையில் நாட்டப்பட்டது.

தொழிற்சாலை நிர்மாணிக்கப்படுவதன் மூலம் சுமார் ஆயிரம் இளைஞர்- யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.எம்.எஸ் சாள்ஸ் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## நத்தைச்சூரி

**Botanical Name: Borreria hispida**
**Family: Rubiaceae**
**English:Shaggy button weed**
**sinh: Hin- getakola**


இச்செடியானது ஓராண்டு, சிலவேளைகளில் பல்லாண்டு வாழக்கூடியதாகும். ஒட்டிப் படரக்கூடியது. தண்டு நீளமாக இருக்கும். நாற்சதுரமான உரோமங்களைக் கொண்டதாகும்.தனியிலை எதிரிலை அடுக்கம் எனக்காணப்படும். 1.2-2.5 செ.மீ நீளம் இலையின் இரு புங்களிலும் மயிர்கள் போன்ற அமைப்பும் காணப்படும். இதன் இலைகள் நீள்வட்ட அல்லது கோளவடிவ அமைப்பைக் கொண்டு இருக்கும். இருபாலான, ஒழுங்கான பூக்களாகவும் ஊதாநிறமுடையவையாகவும் இருக்கும். உலர்ந்த மூடிய அமைப்பையுடைய பழங்கள் 3மி.மீ நீளமுடையதாகும். வழுவழுப்பான விதைகள், மண்ணிறமுடையது. பங்குனி மாதத்திலிருந்து ஆவணிமாதம் வரை பூக்களை அவதானிக்கலாம்.

**பரம்பலும் இனவிருத்தியும்**

கைவிடப்பட்ட தரிசுநிலங்களின் பரம்பல் அதிகம். வெப்ப பிரதேசங்களில் அதிகம் காணலாம். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இதன் வேர் நன்னாரி வேரைப் போலிருக்கும். யாழ். மாவட்டத்தில் இதன் பரம்பல் அதிகம்.

**மருத்துவப்பயன்கள்:**

* இதன் முழுச்செடியும் மருத்துவக் குணம் மிக்கவையாகும்.



* இதன் விதைகள் உடல் உரமாக்கி உடற் தேற்றி செய்கையுடையது. இதன் விதைகளை சேகரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி கோப்பி விதைகளிற்கு பதிலாக பயன்படுத்தினால் உடலிற்கு நல்ல பலத்தை கொடுக்கும்.

* நத்தைச்சூரி விதைக் கோப்பி தயாரிக்க தேவையானவை

கொத்துமல்லி-200 கிராம்
நத்தைச்சூரி விதை-50 கிராம்
நத்தைச்சூரி வேர்-50 கிராம்
ஏலம்-10 கிராம்
சுக்கு-25 கிராம்
நச்சீரகம்-15 கிராம்

மேற்பட்ட அனைத்தையும் கழுவி உலர்த்தி வறுத்து பொடியாக பயன்படுத்தலாம். கோப்பி அடிக்கடிக்கி பருகுவதால் Caffine எனும் வேதியற் பொருளால் ஏற்படும் பக்க விளைவுகளையும் தடுப்பதோடு மட்டுமன்றி உடலிற்கு வலுவைக் கொடுக்கக் கூடியது நத்தைசூரி கோப்பியாகும்.

* விதைகளைப் பொடித்து 2 கிராம் அளவு வெந்நீரில் உட்கொள்ள வயிற்றோட்டம் குணமாகும்.

| | |
|---|---|
| நத்தைச் சூரிவேர் | - 50 கிராம் |
| நெற்பதர் சாம்பல் | - 120 கிராம் |
| கருவேலன்பட்டை | - 50 கிராம் |
| கராம்பு | - 10 கிராம் |

* மேற்படி அனைத்தையும் பொடித்து நுண்ணிய பொடியாக்கி துணியில் அரித்து வைத்துக் கொள்ளவும். இதனை பற்பொடியாக பயன்படுத்தி பல்துலக்கிவர பற்களின் கறைகள் நீங்கி வெண்மையாக வருவதுடன், பற்களிற்கு நல்ல பலத்தைக் கொடுக்கும்.

* நத்தைச் சூரிவேரையும், வெள்ளுன்னியும் சம அளவு எடுத்து இடித்து நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி உடலுக்கு பூசிவர சத்தி, வாத, பித்த, கப நோய்கள் அகலும்.

* இதன் முழுச்செடியையும் எடுத்து நன்கு கழுவி சுத்தம் செய்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி நெய்யில் வதக்கி உணவில் சேர்த்துவர மூலநோய் அகலும்.

* நத்தைச் சூரியை நன்கு கழுவி வாயில் வைத்து மென்று துப்பினால் வாய்நாற்றம் நீங்குவதோடு பற்களிற்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

* இதன் பச்சை வேர்களை நன்கு இடித்து 15 கிராம் எடுத்து 200 மில்லி நீரில் 20 நிமிட நேரம் ஊறவைத்து வடித்து வாய் கொப்பளித்து வர (Mouth Wash) பல்வலி குணமாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

* * * *

எதிர்காலத்தைப்பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழ் மக்களின் நெடுந்துயரை முஸ்லிம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்

புனித ரம்ழான் நோன்பு காலத்தில் யாழ்ப்பாணத்து முஸ்லிம் சகோதரர்களுக்கு இக் கடிதத்தை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் முஸ்லிம் மக்கள் சிறுபான்மை இனங்கள் என்ற வகுதிக்குள் அடக்கப்பட்டிருந்தாலும் சிறுபான்மை மக்கள் உரிமையோடு வாழவேண்டும் என்பதற்காகப் போராடியவர்கள்தமிழர்கள்என்பதுமறுக்கமுடியாதஉண்மை.

இதற்காக தமிழ்மக்கள் இழந்தவை ஏராளம் என்பதை முஸ்லிம் சகோதரர்கள் ஒருபோதும் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

தமிழ் மக்கள் கடந்த மூன்று தசாப்தங்களாக உரிமைப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தமையால் முஸ்லிம் மக்கள் பேரினவாதத்தால் நசுக்கப்படாமல் தப்பித்துக்கொள்ள முடிந்தது என்ற உண்மையையும் முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றே எண்ணுகின்றோம்.

சிறுபான்மை இனங்களை, பேரினவாத சக்திகள் நசுக்கினாலும் பரவாயில்லையென்ற நினைப்போடு தமிழ் அரசியல் தலைமைகள் சிங்கள ஆட்சியாளர்களோடு இணைந்து கொண்டிருந்தால், முஸ்லிம்களின் இருப்பு என்பது கேள்விக்குறியாகியிருந்திருக்கும்.

தமிழரசியல் தலைமைகள் ஒருபோதும் அவ்வாறு நினைத்திலர்.

பெரும்பான்மை இனம் அனுபவிக்கின்ற அத்தனை உரிமைகளையும் சிறுபான்மை மக்கள் அனுபவிக்க வேண்டும் என மனதார விரும்பினர்.

அவர்களின் இந்த விருப்பில் முஸ்லிம் சகோதரர்கள் ஒருபோதும் பிரித்துப்பார்க்கப்பட வில்லை. எனினும் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட காலத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஆட்சியாளர்களுடன் இணைந்து செயற்படலாயின.

தமிழ்–முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து சிறுபான்மை இனத்தின் உரிமைக்காக போராட வேண்டிய நேரத்தில், முஸ்லிம் அரசியல் தலைமைகள் பேரினவாத ஆட்சியாளர்களுடன் இணைந்து கொள்ள, தமிழினம் தனது போராட்டத்தை இறுக்கமாகவும் விரைவாகவும் மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலையை சந்திக்க வேண்டியதாயிற்று.

உண்மையில் இலங்கையில் சிறுபான்மை இனங்களின் உரிமைப்போராட்டத்தில் தமிழ்–முஸ்லிம் இணைவு இல்லாமல் போனமை, இலங்கைத்தீவில் இன்றுவரை சிறுபான்மை இனம் உரிமைபெற முடியாமல் இருப்பதற்கான காரணங்களில் ஒன்றெனலாம்.

எதுவாயினும் இந்த நாட்டில் முஸ்லிம்மக்கள் தமிழ்மக்களுக்குரிய பதவிநிலைகளையும் தமதாக்கிக்கொண்டு உயர்பதவிகளில் இடம்பிடித்துக்கொள்வதற்கும், அதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை அரசு வழங்குவதற்கும் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டமே காரணமெனலாம்.

நிலைமை இதுவாக இருக்கும்போது, யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் சகோதரர்கள் யாழ்ப்பாண நிர்வாகங்களுக்கு எதிராகச் செயற்படுவதை பார்க்கும்போது அவர்கள் திட்டமிட்ட ஒரு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுவது போல தோன்றுகின்றது.

அண்மையில் யாழ்ப்பாண பிரதேச செயலருக்கு எதிராக, முஸ்லிம் சகோதரர்கள் செயற்பட்டது மட்டுமன்றி அதனை ஊடகங்கள் மூலமாக பரப்புரையும் செய்திருந்தனர்.

இத்தகைய சம்பவங்கள் யாழ்ப்பாண மக்களை மிகவும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது. தமிழ் மக்கள் நெடுந்துயரில் வீழ்ந்துள்ளபோது, யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் சகோதரர்கள் தமிழ் நிர்வாகங்களுக்கு எதிராகச் செயற்படுவதை முற்றாகத் தவிர்ப்பதும் நிர்வாக விடயங்கள் தொடர்பில் சுமுகமாக தீர்வுகாண்பதுமே சிறந்ததாகும்.

### இலங்கைத் தமிழர் பிரச்சினை

# நாடாளுமன்றில் விவாதம் நடத்த தி.மு.க. கோரிக்கை

இலங்கையில் நடைபெற்ற போரில் அப்பாவித் தமிழர்கள் 40ஆயிரம் பேர் இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்டது குறித்து விதிமுறை 193 கீழ் மக்களவையில் விவாதம் நடத்த வேண்டும் என தி.மு.க.நாடாளுமன்றத் தலைவர் டி.ஆர்.பாலு மக்களவைத் தலைவரிடம் நோட்டீஸ் அளித்துள்ளார்.

அது குறித்த விவாதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

கச்சதீவு பிரச்சினை, தமிழக மீனவர்கள் பிரச்சினை, மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்தும் மக்களவையில் விவாதிக்க வேண்டும் என தி.மு.க. சார்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இதை அக்கட்சி நாடாளுமன்றத் தலைவர் டி.ஆர். பாலு தெரிவித்தார்.

இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங், மக்களவைத் தலைவர் மீராகுமார், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் மக்களவையின் தலைவருமான பிரணாப் முகர்ஜியை நேரில் சந்தித்து இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ–4)

# தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம்

## தமிழக அரசு அறிவிப்பு

சமூக நலத்துறையால் செயற்படுத்தப்படும் முதியோர் ஓய்வூதியத்திட்டம், ஆதரவற்ற கணவனை இழந்தோர் ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களை தமிழ் நாட்டில் முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவின்மூலம் முகாம்களில் வசிக்கும் 5ஆயிரத்து 544 இலங்கைத் தமிழர்கள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியமாகப் பெறவுள்ளனர்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கைத் தமிழர்கள் நலனில் எப்போதும் அக்கறை கொண்டுள்ளார். எனவே தான் இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களவர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகைசெய்யும் வரையில் அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும்வரையில் ஏனைய நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றினார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அவர்களுடனான சந்திப்பின்போதும் முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் விரைந்து தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான வழிவகை காணப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் பேசினார்.

தமிழகத்துக்கு அகதிகளாக வந்து முகாம்களில் தங்கியுள்ள தமிழர்கள் நலனிலும் முதல்வர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். எனவே தான் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீடிக்கப்படும் என ஆளுநர் உரையில் அறிவித்துள்ளார்.

இதை செயல்படுத்தும் வகையில் சமூக நலத்துறையால் செயல் படுத்தப்படும் முதியோர் ஓய்வூதியத்திட்டம் ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களை தமிழ் நாட்டில் முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ–2)

# யாழ்.மாவட்ட எம்.பி.க்களின் எண்ணிக்கை குறைப்பிற்கு பல முன்னணி கட்சிகள் எதிர்ப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்கும் தேர்தல் ஆணையாளரின் யோசனைத் திட்டத்திற்கு பல முன்னணி கட்சிகள் எதிர் ப்பை தெரிவித்துள்ளன.

வாக்காளர் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியைக் கருத்திற் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தார்.

2009 ஆம் ஆண்டின் பின்னர் வாக்காளர்களின் எண்ணிக்கை 3 இலட் சத்து 20 ஆயிரத்தினால் வீழ்ச்சி யடை ந்துள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்க வேண்டாம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னமும் முழுமையாக சுமுக நிலைமை ஏற்படவில்லை எனவும் இதனால் உறுப்பினர் எண்ணிக்கை குறைப்பது குறித்த நிர்வாக ரீதியான தீர்மானம் ஒத்தி வைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

வடக்கு தொடர்பில் நிர்வாக ரீதியான தீர்மானங்களை விடவும் அரசியல் ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைப்பிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைப்பு தொடர்பில் ஜே.வி.பி. கட்சியும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ–4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## உயர உயர சோதனையும் வரும்

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை ,வேலை செய்யும் கைகள் ஆகியவை அனைவருக்கும் தேவை.

உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன் உண்மையில் பிடிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். இதை கடைப்பிடிப்பவர்கள் வெற்றி பெறுவது உறுதி .

ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வ சக்தி ஒளிந்து கிடக்கிறது. அதை வெளிக்கொண்டு வருவதே நம் வாழ்க்கையின் இலட்சியம். இதற்காகவே பிற வாழ்க்கையிலும் அகவாழ்க்கையிலும் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும்.

உலகம் கோழைக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பி ஓட முயற்சி செய்யாதீர்கள். செய்யும் தொழிலில் வெற்றியோ தோல்வியோ கவலைப்பட்டுக்கொண்டிருக்க கூடாது. தொடர்ந்து பணியை செய்ய வேண்டும்.

மனிதன் எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறானோ அந்தளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து தான் ஆக வேண்டும்.

கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்கு தொண்டு செய். மனிதர்களுக்கு தொண்டு செய்வதன் மூலம் ஆண்டவனுக்கு நீ தொண்டு செய்த

# அமெரிக்க கடன் வரம்பு பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கொண்டு வந்த கடன் வரம்பு அளவை அதிகரிக்கும் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பால் நிதி நெருக்கடி நிலை உருவாகும் சூழல் ஏற்பட்டது. ஆனால் ஜனாதிபதி ஒபாமா பற்றாக்குறையைக் குறைக்க ஒப்புக் கொண்டதால் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளைச்சேர்ந்த உறுப்பினர்களும் இந்த தீர்வை ஏற்றுக் கொண்டதால் அமெரிக்க நிதி நிலை திவாலாகும் சூழலிலிருந்து தப்பியது.

திவாலானால் அது பொருளாதாரத்தில் மிகபெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா குறிப்பிட்டார். இதன்படி அடுத்த 10 ஆண்டுகளில் அமெரிக்க செலவை ஒரு இலட்சம் கோடிவரை கட்டுப்படுத்த ஒப்பு கொள்ளப்பட்டது. இது மிகமிகக் குறைந்த பட்ச அளவாகும். அமெரிக்க ஜனாதிபதியாக ஐஸ்னோவர் இருந்த காலத்தில் உள்நாட்டில் செலவிடப்பட்ட தொகை அளவுக்குக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான முதலீடுகளை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டது. குறிப்பாக ஆராய்ச்சி, கல்வி உள்ளிட்ட துறைகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடன் பெறும் வரம்பை 2 இலட்சம் கோடியாக அதிகரிப்பது எனவும் செலவுகளை 3 இலட்சம் கோடி டொலராகக் குறைப்பது எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

செலவுகளைக் குறைப்பது என்பது அதிரடியாக எடுக்கப்படாது. அவ்விதம் எடுக்கப்பட்டால் அது பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்காது என்றும் ஒபாமா குறிப்பிட்டார். இப்போதைய சூழலில் இது ஒன்றே சிறந்த தீர்வாக இருக்க முடியும் என்ற ஒபாமா தான் தேர்வு செய்த திட்டம் இதுவல்ல. வரிச் சீர்திருத்தத்தில் சில கடுமையான நடைமுறைகள் அவசியம் என தான் கருதுவதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் இது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்.

அதாவது பற்றாக்குறையைக் குறைக்கும் நடவடிக்கைகளை ஒவ்வொரு கட்சியும் வகுத்தளித்து அதை இந்த ஆண்டு இறுதிக்குள் செயற்படுத்த வேண்டும்.

இதன் மூலம் திவாலாவதை தடுப்பதோடு இந்த சிக்கலுக்கும் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-4)

# 2ஜி விவகாரம் அரசுக்கு நெருக்கடி

## பா.ஜ.க. தெரிவிப்பு

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரம் குறித்து அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்து வோம் என்று பா.ஜ.க தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு விவாதம் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப் போவதாக அக்கட்சியின் செய்தி தொடர்பாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான பிரகாஷ் ஜவடேகர் தெரி வித்தார்.

அலைக்கற்றை ஒதுக்கீட்டில் பிரதமர் மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோருக்கும் சம பொறுப்பு உள்ளது தெரிய வந்துள்ளது.

ஆனால் இப்போது ஒவ்வொருவரும் தங்களுக்குள்ள பங்கு மற்றும் பொறுப்பை தட்டிக் கழிப்பதில் தீவிரமாக உள்ளனர்.

இது குறித்து விவாதிக்க வேண்டும் என பா.ஜ.க வலியுறுத்தும். இதை உடனடியாக விவாதிக்க மகஜர் கொடுப்பதோடு கேள்வி நேரத்தை இரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தப் போவதாக அவர் கூறினார்.

(ஸ்ரீ-4)

# இந்திய வெளியுறவுச் செயலராக ரஞ்சன் மத்தாய் பதவியேற்பு



(புதுடில்லி)

இந்திய வெளியுறவுச் செயலராக ரஞ்சன் மத்தாய் டில்லியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொறுப்பேற்றார்.

அவர் இன்னும் இரண்டு ஆண்டு களுக்கு வெளியுறவுச் செயலராக இருப்பார்.

பயங்கரவாதத் தாக்குதல் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இந்தியா - பாகிஸ்தான் பேச்சு நடந்துவரும் முக்கியமான சூழ்நிலையில் ரஞ்சன் மத்தாய் வெளியுறவுச் செயலராகப் பொறுப்பேற்றுள்ளார்.

பதவியேற்றபின் செய்தியாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,


பல்வேறு சவால்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள இந்தப்பொறுப்பில் என்னை நியமித்துள்ளதை பெரிய கௌரவமாகவே கருதுகிறேன். அனைத்து நாடுகளுடன் வலுவான நல்லுறவு ஏற்பட எனது சிறப்பான பங்களிப்பைச் செலுத்துவேன். பாகிஸ்தானுடனும் அனைத்து விடயங்கள் குறித்தும் பேச்சு தொடரும். நம்பிக்கையையும், நல்லுறவையும் ஏற்படுத்த உழைப்பேன். இதுவே எனக்குத் தரப்பட்டுள்ள பணி.

பாகிஸ்தானுடன் இப்போது நடந்துவரும் பேச்சுக்கள் சரியான முறையில் சென்று வருகிறது. அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், கலாசாரம் என பல்வேறு விடயங்களில் உலக நாடுகளுடன் நாம் தொடர்பு வைத்துள்ளோம். இதில் நமது நாட்டுக்கு நன்மை தரும் விடயங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

வெளியுறவுத்துறை செயலராக இருந்த நிருபமாராவ், அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராகப் பொறுப்பேற்றுள்ளார். இதையடுத்து ரஞ்சன் மத்தாய் வெளியுறவுச் செயல்ராக நியமிக்கப்பட்டார்.

(ஸ்ரீ-4)

# பசுபதிநாத் கோவில் விவகாரம் நேபாள அரசுக்கு எதிராக தீர்ப்பு



(காத்மண்டு)

நேபாளத்தில் புகழ்பெற்ற பசுபதிநாத் கோவில் விவகாரம் தொடர்பாக ஆளும் கம்யூனிஸ்ட் கூட்டணி மற்றும் கோவில் நிர்வாக குழு இடையிலான வழக்கில் அந்நாட்டு உச்சநீதிமன்றம் கோவில் குழுவுக்கு சார்பாக தீர்ப்பளித்துள்ளது.

பசுபதிநாத் கோவில் பகுதி மேம்பாட்டு குழுவுக்கு ஆண்டு தோறும் தேர்தல்மூலம் நிர்வாகிகள் நியமிக்கப்படுவர். ஆனால் நேபாளத்தில் மன்னர் ஆட்சி முடிவுக்கு வந்த பின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி கோவில் நிர்வாகத்தில் தலையிடுவது அதிகரித்தது.

சமீபத்தில் மேம்பாட்டுக் குழு கோவில் பணத்தை மோசடி செய்து வருவதால் அதன் நிர்வாகிகளை நீக்கி அந்நாட்டு கலாசார அமைச் சர் கஜேந்திர பிராசீன் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து கோவில் நிர்வாக குழு உச்சநீதிமன்றில் வழக்கு தொடுத்தது. இவ்வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதிபதி பிரகாஷ் ஆஸ்தி அமைச்சரின் உத்தரவு செல்லாது என உத்தரவிட்டார். இதையடுத்து மேம்பாட்டுக் குழு நிர்வாகிகள் நேற்று முன்தினம் கோவிலில் உள்ள தங்கள் அலுவலகத்திற்கு மீண்டும் திரும்பி பணிகளில் ஈடுபட்டனர்.

(ஸ்ரீ-2)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா.வுக்கான அமெரிக்க நிரந்தர பிரதிநிதி சூசன் ரைசை இந்தியாவிற்கான நிரந்தர பிரதிநிதி ஹர்தீப் சிங் புரி சந்தித்து கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# இத்தாலிக்குள் நுழையமுயன்ற —25 அகதிகள் உயிரிழப்பு—

(ரோம்)

இத்தாலிய கடல் எல்லைக்குள் நுழைய முயன்ற அகதிகள் கப்பலில் பயணம் செய்த 25 அகதிகள் உயிரிழந்தனர். சிறிய ரகக் கப்பலில் வந்த அவர்கள் மூச்சுத் திணறலில் உயிரிழந்ததாக இத்தாலிய கடலோரக் காவல் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தாலியில் தெற்குப் பகுதியில் உள்ள லாம்பிடுஸ் எனும் தீவிலிருந்து வந்த அகதிகள் படகில் 271 பேர் பயணம் செய்தனர். இந்தப் படகை கடலோரக் காவல் படையினர் இடைமறித்து சோதித்தபோது, அகதிகளில் 25 பேர் உயிரிழந்தது தெரிய வந்தது.

அதிக எண்ணிக்கையில் பயணிகள் இருந்ததால் இவர்கள் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர். எஞ்சிய அகதிகள் அனைவரும் கடலோரக் காவல்படை கப்பலில் ஏற்றப்பட்டு உள்ளூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அகதிகளில் 36 பெண்கள் , 21 குழந்தைகளும் அடங்குவர்.

ஆபிரிக்க நாடுகளான லிபியா மற்றும் அதைச் சுற்றியுள்ள முறையான உரிமை இல்லாமல் சட்டவிரோதமாக குடியேறும் ஆபிரிக்கர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

(ஸ்ரீ-4)

# வெற்றி எங்கள் பக்கமும் திரும்பும்: முன்னணி வீரர்கள் கவனமாக ஆட வேண்டும்

## இந்திய அணித் தலைவர் தோனி



(நோட்டிங்காம்)

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து அந்நாட்டு அணியுடன் விளையாடி வருகிறது. 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது,

அடுத்து 2 ஆவது டெஸ்ட் டிரண்ட் பிரிட்ஜில் நடந்தது. இந்த போட்டியிலும் இங்கிலாந்து வீரர்கள் அபாரமாக ஆடி வெற்றியை கைப்பற்றினர். இதன் மூலம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இது இந்திய அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஒருவேளை அடுத்த 2 போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றால் கூட தொடரை சமன் செய்ய முடியுமே தவிர தொடரை வெல்லும் வாய்ப்பு இல்லை. அதே சமயம் இங்கிலாந்து அடுத்து 2 போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றால் போதும் தொடரை கைப்பற்றும். இந்த நிலையில் 3 ஆவது போட்டி பர்மிங்காமில் எதிர்வரும் 10 -ந் திகதி தொடங்குகிறது.

நேற்றுமுன்தினப் போட்டியில் ஏற்பட்ட தோல்வி பற்றி இந்திய அணியின் தலைவர் தோனி கூறியதாவது,

எல்லாம் இன்னும் முடிந்துவிடவில்லை. நிலைமை மாறும் என்பது நிகழக்கூடாத ஒன்றல்ல. வீரர்கள் தங்கள் மீதும் அணியின் மீதும் நம்பிக்கை வைத்து விளையாட வேண்டும். முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் இக்கட்டான சூழ்நிலைகளில் மிகவும் கவனமாக செய்ல்பட வேண்டும். கடந்த காலத்திலும் இது போன்ற சம்பவங்களை சந்தித்து இருக்கிறோம்.

இந்த தோல்வி மனதை பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதற்கு முன்பு நானும் அணி வீரர்களும் சிறப்பாக செயல்பட்டதை நினைத்து மனதை தேற்றிக் கொள்ள வேண்டியதுதான். தேவையில்லாமல் சர்ச்சைக்குரிய விதத்தில் நமது வீரர்களுக்கு ஆட்மிழப்பு கொடுக்கப்பட்டது.

இது முதல் முறை அல்ல. இதற்கு முன்பு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரிலும் ஒருமுறை இதுபோன்ற நிலைமையை சந்தித்து உள்ளோம். பழசை மறக்கவே விரும்புகிறோம். இங்கிலாந்து வீரர் இயன் பெல் ரன்-அவுட்டான விடயத்தில் எனது முறையீட்டை திரும்ப பெற்றதில் தவறில்லல என்றே கருதுகிறேன். இதனால் நான் மகிழ்ச்சி தான் அடைந்துள்ளேன். இவ்வாறு தோனி கூறினார்.

# செரீனா அபாரம்



(ஸ்டான்போர்ட்)

பாங் ஒப் வெஸ்ட் கிளாசிக் மகளிர் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ்(அமெரிக்கா) சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் நகரில் நடந்த இறுதிப் போட்டியில் பிரான்ஸ் வீராங்கனை மரியோன் பர்டோலியுடன் மோதிய செரீனா 7-5, 6-1 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை கைப்பற்றினார். முன்னாள் நம்பர்-1 வீராங்கனையான செரீனா காயம் காரணமாக நீண்ட ஓய்வில் இருந்ததால், இப்போது உலக அளவில் 169-வது இடத்துக்கு பின்தங்கியுள்ளார் .

# ஐ.சி.சி. தரவரிசையில் இலங்கை 2 ஆம் இடம்

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் பட்டியலில் இலங்கை இரண்டாமிடத்திற்கு முன்னேறியுள்ளது. அதேவேளை உலக சம்பியனான இந்திய அணி 2 ஆம் இடத்திலிருந்து 3 ஆம் இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை டுபாயில் நேற்றுமுன்தினம் வெளியிட்டது. கடந்த மாதம் வரை இலங்கை 116 புள்ளிகளுடன் நான்காம் இடத்தில் இருந்தது. ஐ.சி.சி. வெளியிட்ட புதிய பட்டியலின்படி இலங்கை 118 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

அதேவேளை 119 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலிருந்த இந்தியா இப்போது 117 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்தில் உள்ளது.

அவுஸ்ரேலியா 130 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதல் இடத்தில் உள்ளது. தென்னாபிரிக்க அணி தொடர்ந்தும் 116 புள்ளிகளுடன் இருப்பினும் இப்பட்டியலில் அவ்வணி 3ஆம் இடத்திலிருந்து 4ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இங்கிலாந்து 5 ஆம் இடத்திலும் பாகிஸ்தான் 6 ஆம் இடத்திலும் உள்ளன.

01.08.2009 ஆம் திகதிக்குப் பின்னர் விளையாடப்பட்ட போட்டிகளின் அடிப்படையில் இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. 01.08.2008 ஆம் திகதிக்கும் 31.07.2009 ஆம் திகதிக்கும் இடையில் நடைபெற்ற போட்டிகளின் தரவுகள் இப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒருவருட காலத்தில் விளையாடப்பட்ட போட்டிகள் அனைத்துக்கும் சமமான புள்ளிகளே வழங்கப்பட்டன. உலகக்கோப்பை போட்டிகளின் பெறுபேறுகளுக்காக விசேட புள்ளிகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த வருடம் ஏப்ரல் 12 ஆம் திகதி இப்பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் அணிக்கு 175,000டொலர் பணப் பரிசும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு 75,000 டொலர் பணப்பரிசும் வழங்கப்படும்.

# சானியா ஜோடி சம்பியன்



(காலேஜ் பார்க்)

சிட்டி ஓபன் டென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா- கஜகஸ்தானின் யாரோஸ்லாவா ஷிவ்தோவா ஜோடி சாம்பியன் பட்டம் வென்று சாதித்தது.

அமெரிக்காவில், பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ. சிட்டி ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா, கஜகஸ்தானின் யாரோஸ்லாவா ஷிவ்தோவா ஜோடி, பெலாரசின் ஆல்கா கோவர்ட்சோவா, ரஷ்யாவின் அலா குட்ரியட்சேவா ஜோடிவை எதிர் கொண்டது.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சானியா-ஷிவ் தோவா ஜோடி 6-3 ,6-3 என்ற நேர் செட்டில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

# சாவகச்சேரி நகரசபையுடனான போட்டி நல்லூர் பிரதேசசபை 'ஏ' அணி வெற்றி


(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையியேயான ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யா/முத்துத்தம்பி பாடசாலை மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சாவகச்சேரி நகரசபை அணி களத்தடுப்பில் ஈடுபட்டது. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நல்லூர் 'ஏ' அணிவீரர்கள் ஆரம்பம் முதலே அபாரமாக ஆடினர். 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் நல்லூர் பிரதேச சபை அணி வீரர்கள் 7 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களை குவித்தனர்.

பதிலுக்கு 128 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி நகர சபை அணியினர் நல்லூர் பிரதேச சபை வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாது 58 ஓட்டங்களுடன் தோல்வியைத் தழுவினர். இதன் மூலம் நல்லூர் பிரதேச சபை 'ஏ' அணி வெற்றிபெற்றது.

# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம் இறுதிப் போட்டிக்கு பல்கலைக்கழக அணி




வீ.டி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 9ஆவது ஆண்டாக நடத்தி வரும் 50 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது அரை இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற போது யாழ்.பல்கலைக் கழக அணி பற்றீசியன்ஸ் அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 45.1 ஓவர்களில் 169 ஓட்டங்களை பெற்றது.

170 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய பல்கலைக்கழக அணி 45.1 ஓவர்களில் 6இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களை பெற்றது.

இப்போட்டியின் சிறந்த வீரராக பல்கலைக்கழக அணியின் ஈ.ஜெயரூபன் தெரிவு செய்யப்பட்டார்.

# வலைப்பந்தாட்ட போட்டியில் சண்டிலிப்பாய் இந்து 3-ம் இடம்

நெஸ்லே நிறுவனத்தினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்திய 16 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

களுத்துறை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கொழும்பு பாலிகா மகாவித்தியாலயமும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஆரம்பத்தில் சமநிலையில் காணப்பட்டாலும் போட்டி ஆரம்பமாகி சில நிமிட நேரத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி போட்டியை வேகப்படுத்தியதைத் தொடர்ந்து முன்னிலைக்கு சென்றது. முதல் பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 8 : 4 புள்ளிகளை பெற்று முன்னிலையில் காணப்பட்டது.

அடுத்து இரண்டாம் பாதி ஆட்டத்திலும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 8 : 3 என்ற அடிப்படையில் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 16 : 7 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொழும்பு பாலிக மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

## மோ. சைக்கிள்...

இரத்தக் காயத்துடன் கிடந்துள்ளார். இதனைக் கண்ட முதியவரின் உறவினர்கள் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முற்பகல் 10.30 மணியளவில் குறித்த முதியவர் உயிரிழந்தார்.

முதியவரை மோதிய மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் தப்பித்து ஓடிவிட்டார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டதோடு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராசா சடலத்தை பார்வையிட்டார்.

முதியவரின் மரணம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)

## தமிழில் ...

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் எஸ்.ஜே. இமானுவேல் அடிகளார், இலங்கையைச் சேர்ந்த மனிதவுரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ, அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரையின் செனவிரட்ன ஆகியோர் இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளனர். (எ)

## இலங்கையர் ...

லுள்ள கடற்கரையில் ஞாயிறு இரவு 7.30 மணியளவில் 5 பேர் குளிக்கச் சென்றதா கவும் 15 நிமிடங்களின் பின் இருவர் காணாமல் போனதை ஏனைய மூவரும் உணர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கரை சேர்ந்த மூவரில் இருவர் சகோதரர்கள் எனவும் அவர்களின் மற்றொரு சகோதரரும் உயிரிழந்தவர்களில் ஒருவராவார். (ஏ)



No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



அதிரடி மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| Pentium 4<br>2.4 Processor<br>512 MB RAM<br>40GB HDD<br>DVD ROM<br>Keyboard/Mouse | Pentium 4<br>2.8 Processor<br>512 MB RAM<br>80GB HDD<br>DVD ROM<br>Keyboard/Mouse | Dual core/core 2 duo<br>Core2 duo 2.0(More)<br>2 GB DDR3 RAM<br>200 GB HDD<br>DVD ROM<br>Keyboard/Mouse |
| Rs. 9,750/= | Rs. 10,750/= | Rs. 26,750/= |

17" LCD Monitor Rs. 6,600/=
15" LCD Monitor Rs. 5,600/=
Hard Disk 80GB - 1,800/= 160GB - 2750/= 200GB - 3250/=
Mother Board 478 - 2500/= LGA - 3500/=
DDR 2 RAM 1GB - 2250/= DDR 3 RAM 2GB - 2750/=

சகல விதமான கணினிகளும் உங்கள் வீடுகளுக்கோ, நிறுவனங்களுக்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும்

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur
021 222 4692 /077 135 0476 /077 053 0566


# அரசு- தமிழ்த் தேசி...

எண்ணிக்கையை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் இதற்கான சிறந்த உதாரணமாக காட்ட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சனல் 4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட ஆவணப் படங்களுக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் ஆவணப் படமொன்றை வெளியிட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டியது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. எவ்வாறெனினும் சனல் 4 ஊடகத்தின் முதல் ஆவணப்படத்தை அரசாங்கம் உத்தியோக பூர்வமாக நிராகரித்த பின்னரும் இரண்டாவது ஆவணப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

இராஜதந்திர ரீதியில் அரசாங்கத்தின் இயலாமையே இதன் மூலம் வெளிப்படுவதாகக் குற்றம் சுமத்துயுள்ளார். எனவே அரசு உடனடியாக இராஜதந்திர ரீதியிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (எ)

# சனல் 4க்கு...

விவரணப் படம் சம்பந்தப்பட்ட காட்சிகள் அதில் இருக்கவில்லை என அந்த அறிக்கையில் அருண ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட 71 இறுவட்டுக்களில் தமிழ்த் திரைப்படங்களும், ஆங்கிலத் திரைப்படங்களும் இருந்ததாக அருண ஜயசிங்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார். வழக்கின்போது கருத்து வெளியிட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் சந்தேகநபருக்கு இங்கிலாந்து விலாசத்தில் இருக்கம் அவரது மனைவியின் சகோதரரான விஸ்வநாதர் கிறிஸ்ணராஜா என்பவர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தமை தெரியவந்துள்ளதாக அதற்கு மேற்படி சந்தேக நபர் உதவவில்லை எனத் தெரியவந்திருப்பதாகவும் கூறினார். இதனையடுத்து சந்தேகநபரை விடுதலை செய்யவும் அவரது பிரித்தானிய கடவுச் சீட்டை திரும்ப ஒப்படைக்கவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இணங்கியது. (எ)

# போர்க் குற்றச்சாட்டை மறை...

போதான அரசாங்கத்தின் அட்டூழியங்கள் தொடர்பாகக் குவியும் சாட்சியங்களை மூடி மறைப்பதற்கான பளபளப்பான புதிய முயற்சி இது.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை ஆனது அதிகரித்து வரும் சாட்சியங்களுக்கு முரணாக தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் போது அரசாங்கப் படைகளினால் அட்டூழியங்கள் எதுவும் இடம்பெறவில்லை என உலகை நம்பச் செய்வதற்கான மற்றொரு பலவீனமான முயற்சி.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட சர்வதேச பொறுப்புடமை முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு உண்மைத்தன்மை கேள்விக்குட்படுத்தப்பட்ட இந்த அறிக்கையை சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் பயன்படுத்தவேண்டும் என அவர் கூறியுள்ளார். (எ-8)

# போர்க் குற்றச்சாட்டிற்கு பதிலளி...

சமூகத் தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு புனர்வாழ்வு ஆணையாளரின் தலைமைச் செயலகத்தின் ஏற்பாட்டில் திருகோணமலையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது அதாவது நந்திக் கடல் களப்புப் பகுதியிலிருந்து படைத்தரப்பினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளே புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர்.

அக் காலப் பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களுக்கு மத்தியில் ஆரம்பித்த இந்தப் புனர்வாழ்வு நடவடிக்கையினை தற்போதும் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றோம். இந் நிலையில் 594 சிறுவர் போராளிகள் 2ஆயிரத்து 033 பெண் போராளிகள் மற்றும் 9ஆயிரத்து 37 ஆண் போராளிகள் என 11 ஆயிரத்து 664 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் எம்மால் புனர்வாழ்வளிக்கப்படும் இந்த 11 ஆயிரத்து 664 முன்னாள் போராளிகளும் தங்களது வீடுகளுக்குச் செல்ல தயக்கம் காட்டி வருகின்றனர். இதற்கான காரணம் அறியப்படாத பட்சத்திலேயே நாம் இவ்வாறான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி தீர்வு காண முற்படுகின்றோம் என அவர் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். (எ-8)


மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்
பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்



பௌர்ணமி நிலவைப் பார்த்து
பார்த்துளம் வேர்த்த வானம்
எந்தனின் இருட்டின் மேலாம்
எதுந்தன் வெளிச்சம் என்றே
துந்தமெய்த் தடைகள்- மேலாம்
தாங்கொணாத் துயர்கள் எல்லாம்
வந்திடும் போதும் வென்றே
வளர்மதி யானீர் வாழி!

இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 02மணி (ஞாயிற்றுக்கிழமை)
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி சமுகந் தரவும்.
—தேவா மணிவிழா சபை
வாழ்த்துவோர்
விக்னா கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்.
(அ-3889)



வழிகாட்டல் கருத்தரங்கு
இந்து நாகரிகம் K.S.ரமணன்
Beacon - யாழ்.நகர்
வியாழன் 04.08.2011 காலை 9.00 -1.00 வரை
✹ அறிவியல் சார்ந்த விடயங்கள் ✹ கையேடுகள் வழங்கப்படும்
முற்றிலும் பரீட்சையை மையப்படுத்தியது.
அனுமதிக் கட்டணம் ரூ.200
(அ-3906)



இலங்கையின் முதல்தர பாடசாலை ஆசிரியர்களால் நடாத்தப்படும்
தரம்- 05 மாணவர்களுக்கான
மாபெரும் கல்விக் கருத்தரங்கு –2011
(பல்லூடக திரையில்– விளக்கங்களும் காட்சிகளும்)
காலம்:– 09.08.2011, 10.08.2011
நேரம்:– மு.ப. 8.30– பி.ப. 2.00 மணிவரை
இடம்:– SCIENCE HALL
(பதிவுகளுக்கு): கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு: 0716424246, 0776688421
ஆசிரியர்கள்:–
திரு.S.B.சுதன் (கொழும்பு இந்துக் கல்லூரி)
திரு.M.அருள் (கொழும்பு இந்துக் கல்லூரி)
தரம்–04 மாணவர்களும் பங்குபற்றிப் பயன்பெறலாம்.
(குறிப்பிட்ட தொகை ஆசனங்கள் இருப்பதால் பதிவுகளுக்கு முந்துங்கள்)
(5713)



காணி விற்பனைக்கு
அச்சுவேலி தெற்கில் 2 பரப்பு, உறுதியுடன் கூடிய தோட்டக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. அரச ஊழியர்களின் வீட்டுக்கடனுக்கு மிகவும் ஏற்றது. விலை 5 இலட்சத்திலிருந்து.
தொடர்புக்கு:
0777246723/ 0212226236
(5716)








DHL
உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான
துரித கடிதங்கள் பொதிகள் சேவை
வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்
London Rs750
CANADA, U.S.A, FRANCE, DENMARK, GERMANY, ITALY, NORWAY, SWISS Rs900
10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது.
DHL Online Tracking

TCN Express,
2B,Nelsan place,Colombo-06.
Customer service No.021 222 7835
☛ குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம்நெற்
இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்பாணம். இல.18,பிரதானவீதி,நெல்லியடி. இல.05,திருநகர் பிரதான வீதி,கிளிநொச்சி. இல.46,ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2-ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.